248

குமரிமலர்

5

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

உணவுச் சிறப்பு

காமதேனு வனஸ்பதியினால் இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள், இனிப்புப் பண்டங்கள் காமதேனு வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது; விலை குறைவானது.

கண்பார்வைக்குத் தேவை யானதும், சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன் லிட்.,

மேட்டூர் அணை, சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.

சுவர்ண மாளிகை
P.A.ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
P-1-49

ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,
Post Box No. 221,
COIMBATORE.

Phone: 409
1409

Gram:
'TEXTOLCO'

குமரி மலர் வெளியீடுகள்

1.	மலேயா முதல் கானடா வரை	ரூ.	2 – 50
2.	அமெரிக்க நாட்டில்	”	5 – 00
3.	கரிபியன் கடலும் கயானவும்	”	4 – 00
4.	உலகம் சுற்றும் தமிழன்	”	2 – 00
5.	பிரயாணக் கட்டுரைகள்	”	1 – 50
6.	அண்டை நாடுகள்	”	0 – 90

வெளிவந்துவிட்டன.

●

ஐரோப்பா வழியாக

விரைவில் வெளிவரும்.

மலர் 15 குமரி மலர் இதழ் 7

விளம்பி - ஐப்பசி

உள்ளுறை

பக்கம்

1. அக்டோபர் இரண்டாந் தேதி
—சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் 1
2. காந்தியடிகள் 13
3. கடவுள் இருக்கிறார்
—காந்தியடிகள் 17
4. தெய்வங்கள் எப்படித் தோன்றின?
—லுவெலின் பௌவில் 22
5. சத்தியம் 26
6. கடமையும் உரிமையும்
—காந்தியடிகள் 30
7. உண்மையான அபாயம்
—காந்தியடிகள் 31
8. காந்தி வாக்கு 33
9. கொய்த மலர்கள் 37
10. வால்ட் டிஸ்னி 43
11. குரங்குத் தொல்லை
—காந்தியடிகள் 49
12. கதிரியக்க விளைவு ஆராய்ச்சி 51
13. காந்தியடிகளும் கடமையும் 56
14. தூமகேது அல்லது வால் நட்சத்திரம்
—எஸ். ஸ்ரீநிவாஸன் 57
15. கிராமப் பொதுவுடமை
—மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 64
16. விஞ்ஞான ருஷ்யா
—டாக்டர் எஸ். பகவந்தம் 70
17. காந்தியைப் போற்றுவோம்
—பொ. சுந்தரமூர்த்தி நாயனர் 79

அக்டோபர் இரண்டாந் தேதி

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

இன்று நமது மகாத்மாவுக்குப் பிறந்த நாள். இப்பொழுது நாம் அந்தப் பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அவரை அறிஞர்களெல்லோரும் உலகப் பெரியோர்களில் ஒருவராகக் கருதுகிறார்கள். எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அதைக் கடவுள் வணக்கமாகச் செய்து விடுகிறது என்று ஹிந்து மதத்தைக் குறித்து நம்மில் பலர் குறை கூறுகிறார்கள். நம்முடைய ஜீவிய காலத்திலேயே காந்தியடிகளுடைய கொள்கைகளைப் பீடத்திலேற்றி வைத்து மதச் சடங்குகளுடன் பூஜை செய்ய ஆரம்பித்து விட்டோம். நூல் நூற்பது எப்படி என்பது தெரியாதவர்கள் கதரைப் பற்றியும், கைராட்டினத்தைப் பற்றியும் பாடல்கள் இயற்றுகிறார்கள். இத்தகைய பூஜை நம்முடைய காலத்திலேயே ஆரம்பித்துவிட்டதைக் காணும் பொழுது, நம்முடைய காலத்திற்குப் பின்னால் எவ்விதம் நடக்குமென்பதை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். ஆதலால் ஆரம்பத்திலிருந்தே நாம் உண்மையைவிட்டு விலகாமலிருக்க முயல வேண்டும். காந்தியடிகள் எதைச் செய்யும்படி நமக்குக் கட்டளை இட்டாரோ அதைச் செய்ய முயல வேண்டும். அவர் சொல்வதை அறிந்து கொள்வது எளிது. சுயராஜ்யத்தை அறிந்து கொள்வதற்கான வழியை அவர் காட்டியிருக்கிறார். அந்த வழியில் செல்வது நமது கடமை,

என்னைப் பற்றி சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். சுதந்திரம் பெறுவதற்கு ஆயுதமேந்திப் புரட்சி செய்வதைத் தவிர வேறுவழி கிடையாது என்றே நான் அரசியல் வாழ்க்கையில் புகுந்த பொழுது எண்ணினேன். என்னைப் போலவே தான் அந்தக் காலத்தில் இருந்த அறிஞர்கள் எல்லோரும் எண்ணினர்கள். ஆனல் போர்முறை அதிகமாக முன்னேற்றம் அடைந்து விட்டபடியால் அதைக் கையாள்வது என்பது அசாத்தியமான காரியம் என்பதையும் நாங்கள் உணர்ந்திருந்தோம். ஆகவே போர் தொடுத்து சுதந்திரம் பெறமுடியாது என்பதை உணரவே நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்ருேம்.

அந்தச் சமயத்தில் வெடிகுண்டு செய்யும் வித்தை இந்திய நாட்டுக்கு வந்து சேர்ந்தது. அதை எறிவது என்பதைப் போர் செய்வது என்றுகூறமுடியாது. வெறும் பயமுறுத்தல் முறையே தவிர வேறன்று. ரகசிய சங்கங்கள் அமைத்து வெடிகுண்டுகள் தயாரித்து இருபது முப்பது நபர்கள் மீது எறிந்து, கொன்று அதன் மூலம் அரசாங்கத்தைப் பயமுறுத்திவிட்டால் அன்னியர்கள் நாட்டைவிட்டு ஓடிவிடுவார்கள் என்று நம்பினர்கள். ஆனல் இரண்டொரு வெள்ளையர் இறந்து போவதால் சுதந்திர காரியம் சித்தியாகப் போவதில்லை என்பதை மக்கள் வெகு சீக்கிரத்தில் அறிந்து கொண்டார்கள். இருபது, முப்பது நபர்களைக் கொன்றுவிட்டால்கூட அவர்கள் ஸ்தானங்களை வகிக்க ஏராளமான வெள்ளையர்கள் வரத் தயங்கமாட்டார்கள். அப்படி வருகிறவர்கள் அதிகமான உறுதியும் பழி வாங்கும் தன்மையும் படைத்தவர்களாக இருப்பார்கள். இதை உணர்ந்ததும் மக்கள் என்ன செய்வது என்று வழி தோன்ருமல் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டார்கள்.

ஒருநாள் நண்பர் ஒருவர் வீட்டில் கழிவு காகிதங்கள் போடும் கூடையில் ஒரு சிறு புஸ்தகத்தைக் கண்டேன். அது தோரோ என்னும் அமெரிக்கர் எழுதிய 'சாத்வீகச் சட்டமறுப்பு' என்னும் நூலாக இருந்தது. அதைப் படித்தேன்; வெகு சுவையுடையதாக இருந்தது. என் கண்கள் திறக்கப்பட்டன. அதே சமயத்தில் மகாத்மா காந்தியடிகள் தென் ஆப்பிக்காவில் செய்து வந்த காரியங்கள் பத்திரிகைகளில் வெளிவரலாயின, அவர் தோரோவின் தத்துவங்களையும், டால்ஸ்டாயின் தத்துவங்களையும் இந்திய அரசியலில் எப்படிக் கையாளலாம் என்னும் முறையைக் கண்டு பிடித்துவிட்டார். நாம் சம்மதிக்காவிட்டால் அன்னியர் நம்மை ஆள முடியாது என்னும் உரிமையை அவர் கண்டு பிடித்துவிட்டார். நாம் சம்மதிக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டால் அந்தக் கணமே அரசாங்கம் முறிந்துபோகவேண்டியதேயாகும். தென் ஆப்பிரிக்காவில் அவர் நடத்திய போராட்டத்தைப் பற்றி வாசித்ததும் அதே ஆயுதத்தை ஏந்தினுல் இந்தியாவும் வெற்றி பெற்று விடலாம் என்பதை உணர்ந்தோம்.

ஒரு சமயம் நான் கர்நூலில் நடைபெற்ற ஒரு மகா நாட்டுக்குப் போயிருந்தேன். அப்போது தென் ஆப்பிரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்தவர்களில் பலர் வந்திருந்தார்கள், அவர்களுக்கு இத்த நாட்டில் வீடு வாசல் கிடையாது; பிழைக்க வழியும் கிடையாது. தென் ஆப்பிரிக்கப் போராட்டத்திற்கு ஆதரவு தேடும்பொருட்டு அவர்கள் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். நான் கர்நூலில் அவர்களில் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். மகாத்மா ஒரு நூல் எழுதியிருப்பதாகவும் அந்தப் நூலை வெளியிடுவதைத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் தடுத்திருப்பதாகவும்

சொன்னார். பின்னர் அவர் அந்தச் சிறு நூலின் பிரதி யொன்றை எனக்கு அனுப்பி வைத்தார்; நான் அதை மிகுந்த ஆவலோடு வாசித்தேன். அது மறுபடியும் வெளியிடப்பட்டிருக்கிறது. எங்கும் கிடைக்கும் அந்த நூலை மகாத்மாஜி கோகலேயிடம் காட்டினார். கோகலே அதைப் படித்து முடித்ததும், கோகலேயிடம் மகாத்மாஜி அதைப் பற்றி தங்கள் கருத்து யாது என்று கேட்டாராம். கோகலே உடனே, "என் கருத்தா, அதை உடனே அராபிக் கடலில் எறிந்து விட வேண்டும்" என்று கூறினாராம். இந்த விபரத்தை மகாத்மாவே என்னிடம் கூறினார். மகாத்மாவுக்கு உதவி செய்வதற்காகவே கோகலே தென் ஆப்பிரிக்காவுக்குப் போயிருந்தார். மகாத்மாவும் அவரைக் குருவாகவே கொண்டாடினார். "இது நல்ல புஸ்தகம்தான், ஆனால் இக்காலத்துக்கு உபயோகப்படாது" என்பது அவருடைய அபிப்பிராயம். அதற்குக் காரணம் அவர் தற்கால நவீன நாகரிகத்திலும் முன்னேற்றத்திலும் யந்திரங்கள் முதலிய சாதனங்களி லும் நம்பிக்கைப் பெற்றிருந்ததுதான். ஆனால் அந்த நூலோ "போதும், இந்த நாகரிகம் முன்போல் எளிய வாழ்க்கை வாழ்வதே சுகம் தரும்" என்று கூறுவதாக இருந்தது.

காந்தியடிகள் இந்தத் தமது "ஹிந்த்ஸ்வராஜ்" என்னும் சிறிய நூலை வெளியிட்ட சமயத்தில் தான் தென் ஆப்பிரிக்காவில் தமது சாத்வீகப் போரை நடத்திக் கொண்டிருந்தார். அவர் அதை முற்றிலும் அஹிம்சா முறையிலேயே நடத்தினார். அப்போது இந்தி யாவில் வெடி குண்டு எறிவதிலும் சதியாலோசனைச் சங்கங்கள் அமைப்பதிலும் ஈடுபட்டிருந்த புரட்சிக்காரர் கள், மகாத்மா சும்மா உலகை ஏமாற்றிக் கொண்டிருக் கிறார்; அவரும் வெகு சீக்கிரத்தில் நம்முடைய கட்சியில்

வந்து சேர்ந்து கொள்வார் என்று எண்ணினார்கள். இந்தப் புரட்சிக் கட்சி இந்தியாவில் மட்டுமின்றி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வேலைசெய்துகொண்டிருந்தது. அந்தக் கட்சியார் எப்பொழுதும் காந்தியடிகளைத் தங்களில் ஒருவராகவே கருதி வந்தார்கள். அவர் தங்களுடன் சேர்ந்து தலைமை தாங்கும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய இந்த எண்ணத்துக்குக் காரணம் யாது?

மிதவாதத் தலைவர்கள் கோழைகளா யிருந்தார்கள். காந்தியடிளோ எதைப் பேசினாலும் எதைச் செய்தாலும் அச்சமின்மையே பிரதானமாக விளங்கிற்று. அவர் ஆங்கிலேயரை உயர்ந்தவர்களாகக் கருதவில்லை. அத்துடன் அச்சமில்லாமல் அவர்களை எதிர்க்க வேண்டும் என்றும் சொன்னார். அதனால் புரட்சிக் கட்சியார், "ஆகா, இத்தகையவர்தான் நமக்குத் தேவை" என்று தங்களுக்குள் கூறிக் கொண்டார்கள். மிதவாதிகள் அவர்களைத் தேசத்தின் விரோதிகள் என்று கண்டித்தார்கள். ஆனால் காந்தியடிகளோ எப்போதும் அவர்களுடைய தேச பக்தியையும் தைரியத்தையும் பாராட்டினார். ஆதலால் அவர்கள், "நம்மை அறிபவர் இவர்தான். இறுதியில் நம்முடன் வந்து சேர்ந்து கொள்ளவே செய்வார்" என்று எண்ணினார்கள்.

இந்த மாதிரிதான் அவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஒரு சிறு உதாரணம் கூறுகிறேன். 1912-ம் வருஷத்தில் ஒரு நபர் இந்தியாவுக்கு வந்தார். அவர் தம்முடைய நண்பர் ஒருவருடன் சேலத்துக்கும் வந்தார். அவர் அப்போது ஒரு சிறு வாலிபர். அவரை நான் சந்தித்தேன். வந்த நபருக்கு லண்டன் நகரில் இருந்த சில இந்தியப் புரட்சிக்காரர்களுடைய பழக்க

முண்டு. நாங்கள் அரசியல் விஷயங்களைப் பற்றியும் புரட்சிக்காரர்களுக்கு வெற்றி கிடைக்குமா என்னும் விஷயத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். எங்களுடனிருந்தவர் ஒருவர், "இனி அவர்கள் பாடு தீர்ந்ததுதான். அவர்கள் அனைவரையும் நசுக்கிவிட்டார்களே" என்று சொன்னார். அதற்கு உடனே அந்த நபர், "அப்படி எண்ணவேண்டாம். காந்தியடிகள் இந்தியாவுக்கு வந்து சேரும்வரை பொறுத்துப் பாருங்கள்" என்று கூறினர். நானும்கூட அப்பொழுது அவ்விதம் எண்ணவில்லை என்று கூறமுடியாது. ஹிம்சையை உபயோகிப்பது தவறு என்பதில் எனக்கு அப்பொழுது உறுதியான நம்பிக்கை உண்டாகவில்லை. காந்தியடிகளையும் புரட்சிக்காரருடன் சேர்ந்துகொள்ளும்படி செய்ய முடியும் என்றே நானும் நம்பினேன்.

அதன் பின்னர் தென்ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் சிறையில் அனுபவித்தவற்றை "மாடர்ன் ரெவ்யூ" என்னும் மாத சஞ்சிகையில் படித்தேன். அவர் தென் ஆப்பிரிக்காவிலிருந்தபோது மூன்று தரம் சிறைப்பட்டு இருக்கிறார். அவருடைய சிறை அனுபவங்கள் மிகுந்த சுவையுடையன. அந்தக் காலத்தில் அரசியல் வாதிகளில் அநேகர் அவற்றைப் படிக்கவில்லை. ஆனால் நானோ அவற்றில் என் மனத்தைப் பறி கொடுத்துவிட்டேன். அதனால்தான் நான் பின்னர் என் சொந்தச் செலவில் அந்த கட்டுரைகளைத் தமிழ்ப் புத்தமாகப் பிரசுரித்தேன். ஆனால் அந்தச் சிறை அனுபவங்களைப் படித்த பிறகு இனி காந்தியடிகளை ஹிம்சையைக் கையாளச் செய்வது என்பது முடியாத காரியம் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன்.

இந்தியாவிலிருந்த அரசியல் வாதிகள் அனைவரும் யாதொரு கட்சி பேதமின்றி காந்தியடிகள் தென் ஆப்

பிரிக்காவில் நடத்திய போராட்டத்தைப் புகழ்ந்து பாராட்டினார்கள். ஆயினும் காந்தியடிகள் அங்கு கையாண்ட முறைகளை இந்தியாவிலும் கையாளலாம் என்ற நம்பிக்கைமட்டும் அவர்களிடம் கிடையாது. தென் ஆப்பிரிக்கத் தொடர்புடைய பாதிரியார் டோக் என்பவர் காந்தியடிகளுடைய ஜீவிய சரிதையை எழுதியிருக்கிறார். தென் ஆப்பிரிக்கத் தொடர்புடைய பாதிரியார் ஒருவர் சேலத்தில் இருந்தார். அவர் அந்த ஜீவிய சரிதையின் பிரதி யொன்றை எனக்குப் படிக்கக் கொடுத்தார். அது மிகுந்த சுவையுடையதாக இருந்தது. மகாத்மாவின் உள்ளக் கருத்து முழுவதையும் தெள்ளத் தெளிய எனக்கு விளக்கிற்று. அதன் பின்என் மனத்தில் எள்ளளவு சந்தேகம்கூடத் தங்கியிருக்கவில்லை. இப்பொழுது அவரை அறிந்திருப்பதுபோலவே அப்போதும் அவரை அறிந்து கொண்டேன். இறுதியாகப் புரட்சிக் கட்சியாருங்கூட காந்தியடிகள் தங்களை எதிர்ப்பவரேயன்றி தங்களுடன் சேரக்கூடியவரல்லர் என்று உணர்ந்துகொண்டார்கள். ஆகவே நம்முடைய நாட்டு அரசியல் வாதிகள் மூன்று கட்சிகளாகப் பிரிந்து நின்றார்கள். அவை காந்தீயம், புரட்சி வாதம், மிதவாதம்.

காந்தியடிகள் 1913-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்ததும் கெய்ரா, சம்பரான் என்னும் இரண்டு போராட்டங்களையும் நடத்தித் தம்முடைய முறைகள் இந்தியாவுக்கும் உகந்தவையே என்று தெளிவுபடுத்தினார். அவர் அஹிம்சையை வெற்றி காணக்கூடிய ஒரு ஆயுதமாகவே செய்திருந்தார். அந்தச் சமயத்தில், பெஸண்ட் அம்மையார் இந்திய அரசியலில் தலைமை வகிக்கலானார். அப்பொழுது அவர் காந்தியடிகளைப் பற்றிச் சிறிதுகூட லட்சியம் செய்யவில்லை. அவரும்கூடக் காந்தியடிகளுடைய

முறைகளை ஹிம்ஸை முறையாகவே கருதினார். காசியில் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா நடந்த போது காந்தியடிகள் வெடிகுண்டு எறியும் தத்துவத்தைப் பற்றிப் பேசினார். வெடிகுண்டு எறிபவரும் நல்ல மனிதரே என்றும் அவரும் தேசத்தினிடம் பக்தியுடைய வரே என்றும் அவரும் தேசத்திற்காக உயிரைக் கொடுக்கும் தியாகியே என்றும் கூறினார். புரட்சிக்காரனுடைய நோக்கத்தைக் கூறிவிட்டு, அவருடைய முறையிலுள்ள பிழையை எடுத்து கூறவிரும்பினார். ஆனால் புரட்சிக்காரரும் தேசபக்தரே என்று காந்தியடிகள் கூறியதும் பெஸண்ட் அம்மையாருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே எழுந்து வெளியே போய்விட்டார். அங்கு வந்திருந்த மகாராஜாக்களும் அவருடன் வெளியேறினார்கள். அதன் பின் வெகுநாள் வரை பெஸண்ட் அம்மையாருக்கும் காந்தியடிகளுக்கும் தொடர்பு இல்லாமலேயே போய்விட்டது. அந்தப் பிரசங்கத்திலேயே காந்தியடிகள், மகாராஜாக்கள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களைப் பற்றியும் குறிப்பிட்டார். ஜனங்களின் வறுமையைப் பற்றி வர்ணித்தார். தேசம் முழுவதும் அரைப்பட்டினியாயிருக்கும்போது இந்த ராஜாக்கள் பெண்களைப் போலவே ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு வந்திருக்கிறார்களே என்று சொன்னார். இப்படிச் சொன்னதும், புரட்சிக்காரர்களைப் பற்றிக் குறிப்பிட்டதும்தான் பெஸண்ட் அம்மையாரும் மகாராஜாக்களும் கூட்டத்தை விட்டு வெளியேறியதற்குக் காரணம். ஆனால் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் செய்த காரியங்கள் அதிக நலம் வாய்ந்ததாக இருந்தமையால் சென்னை கவர்னர் ஆம்டில் பிரபு பகிரங்கமாகக் காந்தியடிகளைப் பாராட்டிப் பேசினார். அதன் பின்னர் காந்தியடிகளுக்கு "கெய்ஸரி—ஹிந்த்" என்னும் பொற்பதக்கம்

அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டது. அந்தப் பதக்கத்தை அவர் ஒத்துழையாமை காலத்தில் அரசாங்கத்தினிடம் கொடுத்துவிட்டார்.

1922-ம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அந்தக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்ற பகிஷ்காரம் நடத்தப் பட்டதை அறிவீர்கள். சத்தியாக்கிரக முறைகளில் தியாகத்துக்குள்ள சம்பந்தத்தைப் பற்றி ஒரு சமயம் நானும் மகாத்மாவும் விவாதித்துக் கொண்டிருந்தோம். அப்போது நான் அவரிடம் "வேல்ஸ் இளவரசர் பகிஷ் கார இயக்கத்தில் தியாகம் என்பதற்கு ஏதேனும் இடமுண்டா? இது வெறும் அரசியல் சூழ்ச்சி மட்டும் தானே" என்று கேட்டேன். அவர் உடனே, "அப்படியா எண்ணுகிறீர்கள்? வேல்ஸ் இளவரசரைச் சந்தித்ததால் என் மனம் எப்படி வேதனைப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியவில்லை. அவமரியாதையாக நடந்து கொள்வதை எண்ணும்பொழுது என் மனத்தில் அதிக வேதனை உண்டாகிறது. அது ஒரு பெரிய தியாகம் அல்லவா?" என்று வெகு உணர்ச்சியுடன் கூறினார். இதிலிருந்து மகாத்மாவின் உண்மையான உள்ளத்தை அறிந்துகொள்ளலாம். அவர் உள்ளம் முழுதும் அன்பால் நிறைந்திருக்கிறது. அவருக்கு நிறபேதம் என்பது அணுவளவுகூடக் கிடையாது. ஆங்கிலேயரைப் பற்றி ஏதேனும் கடுமையாக எழுத வேண்டியிருக்கும் பொழுது அவர் தம்முடைய சொந்த சகோதரரைப் பற்றிக் கடுமையாகச் சொல்லும் பொழுது எவ்வளவு வேதனையை அனுபவிப்பாரோ அவ்வளவு வேதனையை அனுபவித்தார்.

தீண்டாமையை ஒழிப்பதே மகாத்மாவின் பேரவா. அதையே அனைத்திலும் முக்கியமானதாகக் கருதினார்.

அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லுவோர் இந்த விஷயத்தில் அவர் கூறியதை ஒப்புக்கொள்ள முடியாவிட்டால் ஒன்றும் பயனில்லை. இந்த விஷயத்தில் அவர் அனேக விதமான கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார். தம்முடைய மனைவியிடம்கூடச் சண்டையிட வேண்டியதாக இருந்தது. தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்பதை அந்த அம்மையார் ஏற்றுக்கொள்ளவே செய்தார். ஆயினும் மகாத்மா எவ்வளவு தூரம் அதில் முன்னேறிச் செல்லவேண்டுமென்று விரும்பினாரோ அவ்வளவு தூரம் முன்னேறிச் செல்ல அந்த அம்மையால் முடியவில்லை. அல்லதுமகாத்மாதான்அவரைப் பற்றித் தவறாக எண்ணினாரோ என்னவோ? அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. 1915-ம் ஆண்டில் அவர் தென் இந்தியாவுக்கு வந்தார். அப்பொழுது அவர் தம்முடன் தென் ஆப்பிரிக்காவில் உழைத்த ஒரு பஞ்சமருடைய மகனைச் சேர்த்து வைத்துக் கொண்டார். அந்தப் பையனைக் குளிப்பாட்டி அவனுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்யுமாறு தமது மனைவியாரிடம் சொன்னார். வசதிகள் என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். அவற்றை எல்லாம் அந்த அம்மையார் வெகு மகிழ்ச்சியுடன் செய்தார். அந்தப் பையன் மிகச் சிறு பாலகன். அவனை அந்த ரயிலில் தம்முடனேயே கூட்டிக்கொண்டு போனார். அவன் உட்காருமிடத்தை ஆபாசப்படுத்தினான். உடனே அம்மையார் அவனைத் தூக்கிக்கொண்டு போய் தண்ணீர் விட்டுக் கழுவினார். உட்காருமிடத்தையும் சுத்தம் செய்தார். இந்த மாதிரி எல்லாம் அவர் தமது கணவருடன் ஒத்துழைத்த போதிலும் சில சமயங்களில் சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. கணவன்மார் மனைவிமாருடைய கஷ்டங்களை உணர்வதில்லை. அந்தச் சிறுவன் பிறகு காந்தியடிகளை விட்டு ஓடிப்போய்விட்டான். பின்னர்

காந்தியடிகள் குஜராத் பிரதேசத்தைச் சேர்ந்த பஞ்சமச் சிறுமி ஒருத்தியைத் தமது குமாரிபோலவே வளர்த்து வந்தார். அந்தச் சிறுமி அதிக துஷ்டத்தன முள்ளவள். அத்துடன் அவள் பெற்ருேரும் நல்லவர்களில்லே. அதனுல் அந்தச் சிறுமி காரணமாக காந்தியடிகள் அடிக்கடி உண்ணுவிரதம் இருக்கநேர்ந்தது.

தீண்டாமை என்பது தீண்டாதவர்களேப் பீடித் துள்ள நோயன்று. தீண்டாதவர்களேப் பீடித்துள்ளநோய் என்பதே காந்தியடிகளுடைய கருத்து. உயர்ந்த ஜாதி யாரிடையில்தான் அந்த நோய் காணப்படுகிறது. அதனுல் அவர்களுக்குத்தான் சிகிச்சை செய்யவேண்டும். தீண்டாதவர் என்பவரிடம் தீண்டக்கூடாது என்பது யாதொன்றுமில்லே. நாம் தான் அந்த ஈனத்தமான எண்ணத்தால் பீடிக்கப்பட்டிருக்கிருேம். தீண்டாத வரைத் தொட்டால் ஏதோ கெடுதல் ஏற்பட்டுவிடும் என்று நாம் பயப்படுவது தவறு. அந்தப் பயத்தை விட்டொழிக்கவேண்டும். ஆதலால் மக்களுக்கு அறி வூட்டி வரவேண்டும் என்று உறுதி செய்து கொண்டால் தீமையை ஒழிப்பது கஷ்டமான காரியமன்று. தீண்டாத வர்களே எல்லாம் முஸ்லிம்களாகவோ கிறிஸ்தவர்களா கவோ செய்துவிட்டால் அவர்களுடைய கஷ்டங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்று சிலர் எண்ணுகிருர்கள். தீண்டாதவர்கள் அளவு கடந்து கஷ்டப்படுகிருர்கள். அதனுல் ஹிந்து மதத்தைத் திருத்தி அவர்களுடைய கஷ்டங்களே நீக்குவது என்பது முடியாத காரியம் என்று எண்ணுகிருர்கள. வடநாட்டிலுள்ள முஸ்லிம்களும் ஹிந்துக்களும் அனுபவிக்கும் கஷ்டங்களேக் கவனிப் போமாஞல் இந்த விதமான பரிகாரத்தால் பயன் ஏதும் கிடையாது என்பது விளங்கும். தேசம் முழுவதற்கும் நலமும் சமாதானமும் உண்டாக்குவதே நம்முடைய

நோக்கமாக இருக்க வேண்டும். ஆதலால் நாம் உண்மையில் செய்யவேண்டியதெல்லாம் தீண்டாதவர்களிடம் தீண்டாமை என்று ஒன்றுமில்லை. நம்முடைய மனதில் தான் அனுவசியமான பயம் ஒன்று இருக்கிறது. அதை நீக்க வேண்டும். அதை எளிதில் நீக்கிவிடலாம் என்று உயர்ந்த ஜாதியார் என்பவரிடம் கூறி அவர்களுடைய மனத்தை மாற்றவேண்டியதே யாகும்.

எவருடன் சிறிதுநேரம் நடந்து செல்வதே சிறந்த படிப்புக்குச் சமமாகுமோ, எவரை அறிந்தால் அவருக்கு அடிமையாகாமல் இருக்க முடியாதோ அத்தகைய மகான்களில் ஒருவர் காந்தி.

—ஜோஸப். ஜே. டோக்

காந்தியடிகள்

வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க.

—பாரதியார்

எவ்வுயிர்க் குயிராம் ஈசன் இணையடி வாழ்க ஐயன்
செவ்விய வடிவ மாகும் திருவருள் இயற்கை வாழ்க
அவ்விரு தொடர்பு கண்ட அடிகளார் காந்தி வாழ்க
இவ்வுல கெங்கும் அன்னார் எதிர்நெறி வாழ்க வாழ்க.
சாந்தமயம் என இலங்கும் தனிப்பொருளை உளத்தென்றும்
ஏந்தியுயிர் நமக்கெல்லாம் இனிமைசெய உலகிடையே
போந்தகுண மலையாகும் புனிதநிறை கடலாகும்
காந்தியடி இணைமலரைக் கருத்திருத்தி வாழ்த்துவோமே.

—திரு வி. க.

சத்தியம் வாழு மட்டும்
    தருமமே வெல்லு மட்டும்
உத்தமர் பொறுமையாலே,
    உயிர்நல மோங்கு மட்டும்,
வித்தகம் பரந நாட்டின்
    புண்ணியம் விளங்கு மட்டும்
இத்தலம் வாழும் மட்டும்
    இலகுக காந்தி யெம்மான் !

—சுத்தானந்த பாரதி

அய்ய ! வருக: பாரதநாட்டு
அரசே! வருக; உலகிற்கு ஓர்
அணியே! வருக: அடியேனை
ஆண்டாய்! வருக; அவனிஎலாம்
உய்ய வருக; உயிர்க்கு எலாம்
உயிரே! வருக; உத்தமரின்
உணர்வே! வருக; ஓர் ஆடை
உடுத்தாய்! வருக; உண்மைஉரை
செய்ய! வருக; பூமிக்கு ஓர்
திலக! வருக; தெருள்அளிக்கும்
செல்வ! வருக; நெறிதிறம்பாச்
செம்மல்! வருக; சீர்மருவு
கய்ய! வருக; கருணைபுரி
காந்தி! வருக, வருகவே;
கருத்திற்கு இசைந்த கஸ்தூரி
கணவா! வருக; வருகவே.

—ராய. சொ:

வாழி அருஞ்சீர் மலிமகாத் மாகாந்தி
வாழி அவரருளும் வாய்மொழிகள்—வாழியரோ
அப்பெரியார் சொல்லமுதம் ஆய்ந்துல கோர்க் கேயுழைக்கும்
ஒப்புரவோர் வேருவப்பி னேடு

—சி. வேங்கடசாமி ரெட்டியார்

நானே யெனுமகங் கார மொழிந்து நலினசிவந்
தானே யெனுநெறி கண்டவ னிந்து தகை குடிவாழ்
வானே யெனுமதி யாப்நிற்குங் காந்தியின்வாய்ப் பறைதான்
தேனே யெனுஞ் சாந்த மெஞ்ஞான மாயெங்குந் தேக்கியதே.

—ஆநந்த பராதி

தோல்வியை ஒப்பும் தூயன்
துயரினைப் போக்கும் சீயன்
பால் புளிப் பாய்விட் டாலும்
பகலிருள் ஏற்பட் டாலும்
சால்பினில் மாருக் காந்தி
சாந்தமே அளிக்கும் காந்தி
ஆல்அடி யற்றுப் போச்சே
அமைதியை என்று காண்போம் ?

—நாதி

காந்தியடிகள் ஒரு மகான்; தலை சிறந்த மனிதர் அவர் இன்றைய இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களின் அபிமானத்துப் பாத்திரமாயிருப்பதுமன்றி, அவர்களைத் தமது அன்பினால் நடத்திச் செல்லும் அபார சக்தியும் பெற்றிருக்கிருர். அவரது இந்த அபார சக்திக்கும் வெற்றிக்கும் காரணம் என்ன? அவரது பரிசுத்த ஆன்மசக்தியும், தியாக சீலமும்தான். தியாகம் செய்வோரில் பலர் சுயநலத்துக்காகவே தியாகம் செய்பவர்;

அவருடைய வாழ்க்கையே தியாக வாழ்க்கையாகும். அவரேதான் தியாகம். அதிகார ஆசையோ, பதவி மோகமோ அவருக்கு இல்லை. புகழையும் அவர் விரும்பவில்லை. இந்தியா முழுமைக்கும் சக்கரவர்த்தியாக்குவதாகக் கூறுங்கள். அவர் அதை ஏற்க மறுத்துவிடுவார். ஆனால் நகைகளை விற்றுப் பணத்தை ஏழைகளுக்கு விநியோகித்து விடுவார்.

ஏழைகளுக்கு உதவி செய்யவே அவர் ஆவலாய் இருக்கிருர். பிரதி உபகாரம் எதிர்பார்ப்பதில்லை. நன்றி கூட எதிர்பார்க்கமாட்டார். இது மிகைப் படுத்திக் கூறுவதன்று. அவரை எனக்கு நன்ருகத் தெரியும்.

அவருக்குப் பயம் என்பதே கிடையாது. அதனுல் அவருடைய தியாகம் புரியும் சக்தி மென்மேலும் வளர்ந்திருக்கிறது.

சக்கரவர்த்திகள், மகாராஜாக்கள், பீரங்கிகள், கத்திகள், சிறைதண்டனை, சித்திரவதை, அவமதிப்பு, துன்புறுத்தல், ஏன்? மரணம்கூட காந்தியடிகளின் ஆத்ம சக்தியின்முன் எதிர்த்து நிற்க முடியாது.

—ரவீந்திரநாத் தாகுர்

உடலிலே வலிமை இல்லை; ஆனுல் எஃகு போன்ற உறுதி; எப்படிப்பட்ட பௌதிக சக்திகளுக்கு முன்னரும் தலை வணங்காத பாறை போன்ற மனே திடம். பிறரை வசீகரிக்கக் கூடிய உருவமும் இல்லை. இடுப்பிலே ஒற்றை வேஷ்டி, திறந்த உடம்பு. ஆனுல் எல்லோரையும் அன்புடன் வணங்குமாறு தூண்டும் ஒரு ராஜகளை முகத்திலே. மனப்பூர்வமாக வேண்டுமென்றே அவர் அடக்க ஒடுக்கமாக இருக்கிருர். ஆனுல் அவரிடத்தில் அதிகார மிடுக்கு நிரம்பியிருக்கிறது. இது அவருக்கு நன்ருகத் தெரியும். சில சமயங்களில் கீழ்ப்படிந்துதான் நடக்க வேண்டும் என்கிற மாதிரி நமக்கு உத்தரவு போடுவார். அவருடைய ஆழ்ந்த அமைதியான கண்கள் நம்மை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்து மெதுவாக நம் இதயத்தில் என்ன இருக்கிறதென்று ஊடுருவிப் பார்க்கும். தெளிவான அவருடைய பேச்சு நம் இதயத்திலுள்ள ஜீவநாடியைத் தட்டிக்கொடுக்கும். அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறவர் ஒருவராய் இருக்கலாம்; ஆயிரக் கணக்கான மக்களாய் இருக்கலாம். ஆனுல் அவருடைய வசீகர சக்தி, கேட்டுக் கொண்டிருக்கும் அத்தனைபேர் இதயத்திலும் புகுந்து, அவருடன் நேரானசம்பந்தத்தை ஏற்படுத்தும், அவர்தான் காந்தி —ஜவாஹர்லால் நேரு

கடவுள் இருக்கிறார்

காந்தியடிகள்

இன்னதென்று விவரிக்க முடியாததோர் மர்மமான சக்தி, சகல பொருள்களிலும் வியாபித்திருக்கிறது. அதை நான் காணவில்லை; என்றாலும் உணர்கிறேன். கண்ணுக்குப் புலனாகாத இந்தச் சக்தியை நமது உணர்ச்சி உணரும்படி செய்கிறது. எனினும், நிரூபணம் செய்ய முடியாததாய் இருக்கிறது. ஏனெனில், எனது புலன்களால் உணரும் மற்றெல்லாப் பொருள்களையும் போல் இல்லை இது; புலன்களைக் கடந்து நிற்கிறது.

எனினும் கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஓரளவு காரணம் காட்டலாம். சாதாரண விவகாரங்களிலும்கூட, யார் தங்களை எப்படி ஆளுகிறார்கள் என்றறியாத ஜனங்களை நாம் கண்டிருக்கிறோம். ஆயினும், தங்களை ஆளும் ஏதோ ஒரு சக்தி இருப்பதைமட்டில் அவர்கள் நிச்சயமாய் நம்புகிறார்கள்.

மைசூரில் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது ஏழைக் கிராமவாசிகள் அநேகரைச் சந்தித்தேன். அவர்களை விசாரித்தபொழுது, மைசூரை ஆள்வது யாரென்று அவர்களுக்குத் தெரியவில்லை. யாரோ கடவுள் ஆள்வதாகவே அவர்கள் சொன்னார்கள். தங்கள் அரசனைப்பற்றி இந்த ஏழை மக்களின் அறிவு இவ்வளவு அற்பமாய் இருக்குமானால், அவர்களது மன்னரினும் அவர்கள் சிறுமையைவிட எவ்வளவோ மடங்கு

கடவுளினும் சிறியவனுன நான், மன்னர்களுக்கும் மன்னனுன பிரபுவின் — கடவுளின் — பிரசன்னத்தை அறியமுடியா திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஆயினும், அந்த ஏழைமக்கள் மைசூரைப் பற்றி உணர்வது போலவே, அகில உலகிலும் ஓர் ஒழுங்கு நிலவுவதாக நான் உணர்கிறேன்; தோன்றும் சகல பொருள்களையும் ஆளும் மாற்ற முடியாத உன்னத நியதி ஒன்று இருப்பதாக நான் உணர்கிறேன். அது ஒரு குருட்டுச் சட்டமன்று. ஏனெனில் குருட்டுச் சட்டம் ஜீவப் பொருள்களை ஆளமுடியாது. ஸர். ஜே. ஸி. போஸின் ஆச்சர்ய ஆராய்ச்சிகளால், ஜடப் பொருள் களுக்குக்கூட ஜீவனிருப்பதாய் நிரூபணமாயிருக்கிறது. சகல ஜீவனையும் ஆளும் அந்த 'நியதியே' கடவுள். சட்ட மும் சட்ட கர்த்தாவும் ஒன்றே. சட்டத்தையும், சட்ட கர்த்தாவையும் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாததற்காக சட்டத்தையோ, சட்ட கர்த்தாவையோ நான் மறுத்து விட முடியாது. பூலோக அரசு ஒன்றை நான் மறுப்பது எப்படிப் பயன்படாதோ அப்படியே, கடவுளையும் அவர் நியதியையும் நான் மறுப்பது பயன்படாது; அந்த நியதியினின்று நான் விடுதலை பெறவும் முடியாது.

பூலோக அரசை அங்கீகரித்தால், அவ்வாட்சியின் கீழ் வாழ்வு சுலபமாகிறது; அதேபோல், தெய்வ ஆட்சி யையும் பணிவுடனும் மௌனமாகவும் அங்கீகரித்தால், வாழ்க்கை யாத்திரை மிகச் சுலபமாகிறது.

என்னைச் சூழவுள்ள சகல பொருள்களும் சதா மாறியும், சதா இறந்தும் வருகையில், அந்தச் சகல மாறு தல்களினூடேயும் புதைந்து நிலவும் ஓர் ஜீவசக்தி, மிக மங்கலாக என் உள்ளத்துக்குப் புலப்படுகிறது. அது மாறுதலற்றது, யாவற்றையும் இசைப்பது, படைப்பது.

மாய்ப்பது, மறுபடியும் படைப்பது. அந்த அருட் சக்தி அல்லது ஆத்மாவே கடவுள். என் புலன்களால் மட்டில் நான் காணும் இதர பொருள் எதுவும் நிலைத்திராததால், நிலைத்திருக்க முடியாததால், கடவுள் மட்டிலுமே உண்மை.

இந்தச் சக்தி நன்மையானதா? தீயதா? இது தூய நன்மையே பயப்பது என்றுதான் நான் காண்கின்றேன். ஏனெனில், சாவுக்கு நடுவே வாழ்வு நிலைத்திருக்கிறது; பொய்க்கு நடுவே உண்மை நிலைத்திருக்கிறது; இருளுக்கு நடுவே ஒளி நிலைத்திருக்கிறது. ஆதலால் கடவுள் உயிரும், உண்மையும், ஒளியுமாயிருப்பதாய் நான் ஊகிக்கின்றேன். அவர் அன்பு மயம்; உன்னதமான நன்மையின் உரு.

ஆனால், அறிவைமட்டில் திருப்தி செய்பவராயின் அவர் கடவுளாகார். கடவுள் கடவுளாய் இருப்பதற்கு, நம் இதயத்தையே ஆண்டு மாற்றுபவராய் இருக்க வேண்டும். தமது பக்தனின் ஒவ்வொரு மிகச் சிறிய காரியத்திலும் அவர் வெளிப்பட வேண்டும். ஐம்புலன்களின் நுகர்ச்சிக்கும் அப்பாற்பட்ட அநுபவமோ பிசகவே பிசகாது. அது புறச்சான்றுகளால் நிரூபணமாவதில்லை. உள்ளத்தினுள்ளே உறையும் இறைவனை உண்மையில் கண்டு கொண்டோரின் குணதிசயம் மாறுவதால்தான் அது நிரூபணமாகும். அத்தகைய சான்று, எல்லாக் காலத்தும், எல்லா நாடுகளிலும் வாழையடி வாழையாய் இடையறாது வந்த மகான்கள், தீர்க்கதரிசிகள் அனுபவங்களிலேயே காணக் கிடக்கின்றது. அதை ஒருவர் மறுப்பது தம்மையே மறுப்பதற்கு ஒப்பாகும்.

அசைக்க முடியாத நம்பிக்கை வைத்தால்தான், இந்த அனுபவம் சித்திக்கும். தெய்வ சாநித்திய உண்மையைத் தன்னிடத்திலே பரீட்சிக்க விரும்பும் ஒருவன்,

மகா உறுதியான நம்பிக்கையால்தான் அப்படிச் செய்ய முடியும். நம்பிக்கையையோ, புறச்சான்று எதனுலும் நிரூபிக்க முடியாது. ஆதலால், தர்ம சக்தியினுல்தான் உலகம் ஆளப்படுகிறது என்று அவன் நம்புவதே பத்திர மான மார்க்கம். ஒழுக்கமே, சத்தியத்தையும் அன்பை யும் அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கமே, மிக உன்னத மான தர்மம் என்று அவன் நம்பவேண்டும். சத்தியத் துக்கும் அன்புக்கும் மாறுபட்ட சான்றுகளை எல்லாம் முன்பின் யோசியாமல் உதறித்தள்ளும் உறுதிவேண்டும். நம்பிக்கையையே உறுதியாய்க் கடைப்பிடிக்கவேண்டும். இதுதான் பத்திரமான வழி.

என் உயிரே போவதாயினும் சரியென்று துணிந்து தீமையை எதிர்த்துப் போரிட நான் முன்வரவில்லை யாளுல், கடவுளை ஒருநாளும் கண்டு கொள்ள முடியாது. தாழ்மையோடு வரம்புக்கு உள்பட்ட என் சொந்த அனுபவத்தைக் கொண்டே எனக்கொரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையிலேயே நான் உறுதி அடைந்திருக்கிறேன். எவ்வளவுக் கெவ்வளவு நான் தூய்மையடைகிறேனே, அவ்வளவுக் கவ்வளவு கடவுளை நெருங்கி விட்டதாக எனக்குத் தோன்றுகிறது. இன்று இருப்பதுபோல் எனது நம்பிக்கை மிக அற்பமா யில்லாமல் இமயம் போல் அசைக்க முடியாதாய், அதன் சிகரங்களில் உள்ள பனிச்சுழல்போல் வெண்மையும் ஒளியும் பிறங்குவதாய் இருக்குமாளுல், கடவுளை இன்னும் எவ்வளவோ கிட்ட நெருங்கி யிருப் பேனன்ருே?

இடையிலே, தம் அனுபவத்தைக் கவியாய்ப் பொழிந்த கவிஞர் நியூமான் என்பவருடன் நாமும் பின் வருமாறு பிரார்த்திப்போம்:

Lead, kindly Light, amidst the encircling gloom
Leed Thou me on;
The night is dark and I am far away from home,
Lead Thou me on;
Keep Thou my feet, I do not ask to see
The distant scene; one step enough for me.

—Newman

ஒணியே! அருளின் ஒளியே! உழலும் இருளில் தனியே
மருளால் துழுவித் திரிவேன்; வழியே அறியேன், அடியேன்
களியா மனையைக் காணேன்; கானம் தன்னில் அலைவேன்
நெறியே அருளாய்; நிதமே நினையே புகலாய் நினைவேன்
தொலையில் தெரியும் தோற்றம் துணியக் கொள்ளேன் துயரம்
நெறியே தவ்ருச் சுவடில் நிற்கும் ஓரடி யருளாய்.

தெய்வங்கள் எப்படித் தோன்றின ?

ஷூவெலின் பௌவில்

எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் சரி; அந்த மதத்தின் மூல காரணமான மனோதத்துவ நிகழ்ச்சியை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆதியந்தமற்ற அநாதிப் பொருளின் முன்னே, ஜீவ மனிதனது ஆன்மா சுருங்கிய நடுக்கத்தினின்றே மதங்கள் பிறந்துள்ளன.

ஒரு மனிதன் சாகும் பொழுது—அது அரண்மனையிலேனும் சரி, சின்னஞ் சிறு குடிசையிலேனும் சரி—கூட விருப்போர் மனத்துக்குத் திடீரென்று ஒரு கேள்வி பிறக்கிறது. ஒவ்வொரு பிணமும் கடுமையானதோர் பரீட்சாதிகாரியாகும். இன்றல்ல; என்று தினம், வனக் குரங்கினின்றும் நம்மைப் பிரிக்கும் விவேகம் உதயமாயிற்றோ அன்று முதல், இச் சம்பவம் நிகழ்ந்து வருகிறது. சகல ஒழுக்கங்களும், சகல வேதாந்தங்களும், சகல மதங்களும் நேரே சாவினின்றும் பிறந்த விளைவுகளேயாகும். புதைந்த மரங்களிலே வளர்ந்து கிளம்பும் தேரைகளைப் போலவே, இந்தக் கற்பனை மயக்கங்களும், புதைபட்ட எலும்புகளையே தங்கள் ஊட்டமாய்க்கொண்டு வளர்கின்றன.

தலைமுறைகள் பல திடுதிடுவென்று மறைந்து விடுகின்றனவே! ஏன் ? இதற்கொரு சமாதானம் நமக்கு

வேண்டியிருக்கிறது. பரோவா, ஸீஸர், தாமர்லேன் ஆகிய மன்னுதி மன்னர்களாலும், தங்கள் வாழ்வை அர்த்தமற்ற நீர்க் குமிழியாய்க் கருத மன மிசைவதில்லே. இல்லேயாயின் மனித வர்க்கத்தின் அகங்காரத்துக் கன்றே கேடு விளேகின்றது !

அற்ப ஈயும் எறும்பும் வேண்டுமானுல் அர்த்த மற்று அழியட்டும்; பிராணிகளுக் கெல்லாம் தலேவனுன மனிதன் அப்படி அழிய முடியாது.

பயத்தினின்றே மதம் பிறந்தது என்று சொல்லுகிருர்களே, அது உண்மை. இயற்கையைக் கண்டு பயம்; இயற்கைக்கும் அதீதமான ஒரு சக்தியை எண்ணிப் பயம்; சாவில் பயம்! கடவுளின் பயங்கர திருஷ்டியில் படாமல், நமது மும்முரமான காரியங்களே நாம் செய்து கொண்டிருப்பதற்காக, சதாகாலமும் தீப தூப புகைப் படங்களே நாம் வானத்துக்கு அனுப்பிக் கொண்டிருக் கிருேம். செத்த உடல் ஒன்றை நாம் காணும்போதெல் லாம்,நமது சக்தியையும் பற்றி நாம் நினேவு கூறுகிருேம். மந்திரத்தை ஜபித்து, மணியை அடித்து, பயபக்தியோடு ஊர்வலமும் புறப்படுகிருேம். சிலந்தியைப் போல், வெகு ஊக்கமாய் வலேயொன்று பின்னி, நாமாய்ப் பின் னிய அம் மெல்லிய வலேத் திரையின் பின்னே ஒளிந்து நமது அசட்டுத் துணிச்சலே மீண்டும் பெறமுயல்கிருேம்.

சுயப் பிரக்ஞை மிகக் கரடுமுரடான ஆரம்ப நிலே யிலே இருப்பினும்கூட. அந்தப் பிரக்ஞை தோன்றிய வுடனே இயற்கைக்கு அதிகமான ஒரு சக்தியில் நம் பிக்கை உண்டாகித்தான் தீர்கிறது. நமது மூதாதையர் களான ஆதி மனிதர்கள், குரங்குகளாய் மரத்திலே தொத்துவதைவிட்டு, தரையிலே குதித்தபோதும், திறு திறு வென்று விழித்துக் கொண்டு தங்கள் குகைகளில்

இருந்து வெளிக் கிளம்பிய போதும், கால் பரப்பி அமர்ந்து தம் சிக்கி முக்கி கற்களைச் சூப்பிக்கொண்டு இருந்த போதும் சிருஷ்டியின் அற்புதத்தைப்பற்றிப் பளிச்சென்று நினைவு கூர்ந்துதானிருப்பார்கள். காரணம் தரியாததோர் காலடிச் சத்தம், தற்செயலாய்த் தோன்றிய தோர் வேறு நிழல், தங்கள் குரலே திரும்பி வந்ததோர் எதிரொலிகூடத்தான் — இவை யெல்லாம் சந்தேக மெழுப்பிப் பல கற்பனைகளை அவர்களிடம் தூண்டித் தானிருக்கும். அந்தச் சந்தேகத்துக்கு இடமான அற்பசம் பவங்களைக் கண்டு அவர்கள் அசட்டை செய்திருப்பினும் கூட, காதைத் துளைக்கும் இடியின் உறுமலைக் கேட்ட போதும், மணிக்கு மணி தம்மருகே மாண்டு கிடக்கும் பிரேதம் கண்ணற்று, மூச்சற்று, கருத்துமற்றுப் பிடி வாதம் புரியும் போதும், அவர்களில் எவர்தான் அலட்சி யமாக இருந்திருக்க முடியும்?

இன்று நம்மில் சிலர் வாழ்வின் மர்மத்தைக் கவிதை யில் கண்டு திருப்தி கொள்கிறோம். ஆதிமனிதனின் வியப்புணர்ச்சி இன்னும்கூட நம்மிடம் இருந்துதான் வருகிறது என்பதையே இது காட்டுகிறது. அறிய இயலாததோர் சக்திக்கு நாம் செலுத்தும் வணக்கமே யாகும் இது.

சூரியனின் இடையறு இரு அயன கதிகளின் கம்பீர மும், சந்திரனின் மாதப் பிறைகளும் வானத்து நட்சத் திரங்கள் நள்ளிரவிலே எண்ணற்று மல்குவதும், தம்மை மதச் சிந்தனைகளிலே மூழ்குமாறு வற்புறுத்துகின்றன. கோடையிலே மலருக்கு மலர் தாவும் வண்ணத்திப் பூச்சி களை—வர்ணச் சிறகுடைய, எலும்பே இல்லாத அவ் விசித்திர பூச்சிகளை - காணுமொருவன், அவன் பரம மூடனுயிருப்பினும்கூட, அவ்வழியும் அழகுக்குள்ளே

மகோன்னதப் பொருள் ஒன்றைக் கண்டு கொள்கிருன். வாழ்வின் அதிசயத்தைக் கண்டு ஒரு வியப்புணர்ச்சி உண்டாகிறது; 'ஆத்மீக' நிலையிலே, தெய்வங்கள் முளைக்கின்றன. வேலியில் கள்ளிபோலச் சர்வ சாதாரணமாய் முளைக்கின்றன! இந்த வசதியான கற்பனைச் சக்திகள் நமது மனக்குழப்பச் சிக்கல்களைத் தீர்க்கின்றன. நமது சந்தேகங்களுக்கெல்லாம் சுலபமான பரிகார மாகின்றன. நமது வியப்புக்குச் சாந்தி ஏற்படுகிறது. சகலமும் தெளிவாகி விடுகிறது!

சத்தியம்

[காந்தியடிகள் எரவாடா சிறையிலிருந்து சபர்மதி ஆசிரமத்திற்கு எழுதிய கடிதம்.]

"சத்தியம்" (உண்மை) என்னும் வார்த்தை "சத்" என்பதிலிருந்து வந்தது. "சத்" என்னும் பதத்திற்கு 'இருத்தல்' என்பது பொருள். எனவே சத்தியத்தைத் தவிர உண்மையில் வேறென்றுமில்லை என்பதும் புலப் படும். அதனால்தான் "சத்" அல்லது உண்மை என்பது கடவுளின் முக்கியமான பெயராக விளங்குகின்றது. கடவுள் சத்தியம் என்பதைவிட சத்தியமே கடவுள் என்பதுதான் சரியானது. ஆனால் நம்மை ஆள்பவன் அல்லது தலைவன் என்று யாரேனுமில்லாதிருத்தல் இயலாது. ஆதலின் ராஜாதி ராஜன், சர்வ வல்லவன் என்னும் புனைப்பெயர்கள் கடவுளுக்கு இருந்தே தீரும். ஆராய்ந்து பார்ப்பின், "சத்" அல்லது சத்தியம் என்பதுதான் கடவுளுக்குத் தகுந்த பெயர், அவரது முழு மகிமையையும் அப்பெயர் விளங்குகின்றது.

சத்தியமிருக்கும் இடத்தில் களங்கமற்ற அறிவும் இருக்கிறது. சத்தியமில்லாவிடத்து சுத்த ஞானம் கிடையாது. அதனால்தான் "சித்" அல்லது "ஞானம்" என்பது கடவுளின் பெயருடன் சேர்க்கப் பட்டிருக்கிறது. உண்மை அறிவுள்ள விடத்தில் "ஆனந்தம்" என்பது உண்டு. துக்கத்திற்கு அங்கு இடமில்லை. சத்தியம் எப்பொழுதும் உள்ளது; அவ்வாறே அதனின்றும்

உண்டான ஆனந்தமும் எப்பொழுதும் நிலைத்திருப்பது. அதனால்தான் கடவுள் "சத்-சித்-ஆனந்தம்" என அழைக்கப்படுகிறார். உண்மை, அறிவு, ஆனந்தம் இம் மூன்றின் சொரூபமே ஆண்டவன்.

சத்திய உபாஸகனாக இருப்பதே மனித வாழ்வின் முக்கிய நோக்கம். சத்தியத்தைச் சுற்றியே மனிதனின் செயல்கள் நடைபெறவேண்டும், மனித வாழ்வுக்கு மூச்சுப் போன்றது 'சத்தியம்.' வாழ்வென்னும் யாத்திரையில் இந்த எல்லைக் கல்லைத் தாண்டிவிட்டால் இதர நல்ல தன்மைகளும் சரியான செயல்களும் தானாகவே ஓடி வரும். ஆனால் சத்திய நோக்கமில்லாது போய்விட்டால் வாழ்வின் தத்துவங்களெதையும் அனுஷ்டிக்க முடியாமலே போய்விடும்.

பொதுவாக உண்மை பேசுவதுதான் சத்திய தர்மம் என்று அநேகர் நினைக்கின்றனர். ஆனால் ஆசிரமத்தில் நாங்கள் "சத்தியம்" அல்லது உண்மை என்பதற்கு இன்னும் விரிவான அர்த்தம் கொடுக்கிறோம். மனத்திலும், பேச்சிலும், செய்கையிலும் உண்மை யிருக்கவேண்டும். இவ்வுண்மையை நன்றாக அறிந்தவனுக்குத் தெரிய வேண்டியது வேறொன்றுமில்லை. ஏனெனில் எல்லா அறிவும் அதனுள்ளேயே ஐக்கியமா யிருக்கின்றது. உண்மை அறிவு இல்லையேல் மனிதனுக்கு மனவமைதியும் கிடையாது. சத்தியம் எது என்பதைப் பிழையின்றி அறிந்து கொள்வதற்கான இவ்வழியை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது எது செய்யத் தகுந்தது, எது பார்க்கத் தகுந்தது, எது வாசிக்கத் தகுந்தது என்பது உடனுக்குடன் புலப்படும்.

சத்தியம் என்பது ஒரு"ஸ்பர்சவேதி"போன்றது, அதாவது தொட்டதெல்லாம் பொன்னாக்கும் இயல்புடைய

கல்லைப் போன்றது. காமதேனுவைப் போன்றும் அது இருக்கிறது. இதை எப்படி அறிவது? அப்பியாஸத்தினாலும், வாழ்க்கையில் பிறபொருள்களின் மீதுள்ள வைராக்கியத்தினாலும், உண்மை நிலையை அடைய வேண்டுமென்ற சஞ்சலமற்ற தியானத்தினாலும், சத்தியத்தை அடையலாம் என்று பகவத்கீதை கூறுகிறது. ஆனால் அப்படிச் செய்யப்படும் தியானத்தில் ஒருவருக்கு உண்மையெனத் தோன்றுவது மற்றவர்களுக்குப் பொய்யெனத் தோன்றலாம். உண்மையைத் தேடித் திரிபவனுக்கு அதைப் பற்றிய கவலை வேண்டியதில்லை, எவன் உண்மையாகப் பாடுபடுகின்றானோ அவனுக்கு வெளிச்சம் தோன்றியே தீரும். "சத்தியம்" என்ற மரத்தின் இலைகளே போன்று இதர நற்குணங்களும் இருக்கின்றன. கடவுள் பலவித மனிதர்கள் முன்பு பலவித உருவங்களோடு தோன்றுகின்றாரன்றோ! அப்படித் தோன்றினாலும் அவர் ஒருவர்தானே! எனவே கடவுள்தான் சத்தியம். சத்தியம்தான் கடவுள். ஆகவே அவனவனுக்குச் சரி எனத்தோன்றும் சத்தியமார்க்கத்தை அவனவன் பின்பற்றுவதில் யாதொரு தவறுமில்லை. ஏதாவது நடுவில் தவறு ஏற்பட்டாலும் சத்திய உபாஸகன் தானாகவே திருத்திக் கொள்வான். சத்திய சோதனை என்பது பெரிய தவமாகும். சத்திய உபாஸகன் துன்பங்களை ஏற்றுக் கொள்ள நேரிடும். ஒருவேளை பிராணத் தியாகமும் செய்ய நேரிடலாம். துளிச் சுய நலத்திற்குக் கூட சத்திய வாழ்வில் இடமில்லை. அப்படித் தன்னை மறந்து உண்மையைத் தேடித் திரியும்பொழுது, வேறு வழியிற் போகவும் முடியாது. ஓர் இடறல் ஏற்பட்டுத் தவறு செய்தவுடனே, சரியான வழிக்குப் பக்தன் திரும்பி விடுகிறான். உண்மையைக் கடைப்பிடித்தல்தான் நிஜ பக்தியாகும். அதுதான் கடவுளிடம் சேர்ப்பிக்கும் வழி.

அதில் கோழைத்தனம் என்பது ஏது? தோல்விதான் ஏது? மரணம் என்பது பேரின்ப வீட்டின் வாயில் என்று தெரிவிப்பதும் அதுதான்.

ஹரிச்சந்திரன், பிரகலாதன், இராமர், இமாம் ஹசான், ஹுசேன், இன்னும் இதர கிறிஸ்து மதப் பெரியார்கள் இவர்களின் வாழ்க்கைகள் இவ்விஷயத்தை நன்கு விளக்கிக் காட்டுகின்றன. நம்மோர் அனைருவம், இளைஞர்களும், முதியவரும், ஆண், பெண் அடங்கலும் சத்திய சேவை செய்வதே நோக்கமென்று இருப்பார் களர்யின் எவ்வளவு அழகாயிருக்கும்! வேலை செய்யும் போதும், சாப்பிடும்போதும், குடிக்கும்போதும், விளையா டும்போதும், விழித்துக் கொண்டுள்ள எந்த நேரத்திலும் சத்தியமே தியானமாக இருப்போமானால் சுத்தமான கனவற்ற துயில் ஏற்படுமன்றோ! சத்திய ஸ்வரூபியான கடவுள் எனக்கு விலைமதிக்க வொண்ணாத பொக்கிஷமா யிருக்கிறார். நம்மோரனைவருக்கும் அவர் அவ்வாறே இருப்பாராக!

கடமையும் உரிமையும்

காந்தியடிகள்

கடமையைச் சரிவரச் செய்தால் எந்த உரிமைகள் கிடைக்குமோ அவைதான் உரிமைகளாகப் பெறத்தகுந் தவை. மற்ற உரிமைகள் பெறத்தக்கவையல்ல. அவை உரிமைகளாகா; பிறருடைய உரிமைகளைப் பறிப்பதே ஆகும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல், குழந்தைகள் தங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று கூறினால், அத்தகைய பெற்றோர் நிந்திக்கப்படத் தகுந்த வர்கள். எப்பொழுதும் தம் கடமையைச் செய்யத் தயாராயிருக்கும் பெற்றோர்க்கும் கீழ்ப்படிந்து நடக்காத குழந்தைகள் நன்றி கொன்றவர்களாகக் கருதப் படுவார்கள்.

கூடா ஒழுக்கமுடைய கணவன், மனைவி தனக்கு எல்லா விதத்திலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று கூறினால், அது இந்துமத சம்பிரதாயத்தை இழிவு படுத்துவதேயாகும்.

கடமைகளையும், கடமைகளைச் செய்தால் விளையும் உரிமைகளையும் உணர்ந்து கொண்டால், உலக மெங்கும் காணப்படும் குழப்பங்கள் எல்லாம் உடனடியாக மறைந்து விடும்.

உண்மையான அபாயம்

காந்தியடிகள்

நமக்கு அகத்திலே எவ்வித அபாயம் உண்டாகும் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அபாயங்களில் தலைமை ஸ்தானம் வகிப்பது உடலும் உள்ளமும் சோம்பலா யிருப்பதேயாகும். இந்தச் சோம்பல் உண்டாவதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் சிறை வாசம் சென்றுவிட்டதால், சுதந்திரம் அடைவதற்கு வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை யென்றும், தேர்தலிலும் உத்தியோக நியமனத்திலும் காங்கிரஸ் ஸ்தாபனம் நன்றியறிதலுடன் முதன் முதலாகக் கவனிக்கப்பட வேண்டியவர் தாங்களே என்றும் எண்ணி ஆத்ம திருப்தி அடைந்து கொள்வதேயாகும். அந்தக் காரணத்தால், 'பரிசுப் பதவிகள்' என்று கூறப்படும் பதவிகளைப் பெறுவதற்காக கேவலமானதும், அநாகரிகமானதுமான முறையில் காங்கிரஸ்காரர்களுக்குள் போட்டி நடந்து வருகிறது. இதில் இரண்டுவிதமான தவறுகள் உள. காங்கிரஸ் அகராதியில் 'பரிசு' என்பது காணப் படவே கூடாது. சிறைவாசத்துக்குரிய பரிசு சிறை வாசமேதான். அதுதான் சத்தியாக்கிரகியின் பிரதம பரீட்சையாகும்.

குற்றமற்ற ஆட்டுக் குட்டிக்குக் கசாப்புக்கடை புண்ணிய க்ஷேத்திரமாக இருப்பதுபோல, காங்கிரஸ் ஊழியர் போய்ச் சேரவேண்டிய புண்ணிய க்ஷேத்திரம் தூக்கு மேடையே யாகும்.

விஷயம் இப்படியிருக்க, சிறைக்குப் போவதைக் காங்கிரஸ்காரர்கள் பதவிகளை அடைவதற்குரிய யோக்கியதையாக உபயோகித்து வருகிறார்கள். இம் மாதிரி செய்தால், சத்தியாக்கிரகியின் சிறைவாசமும் திருடர்களுடைய சிறைவாசம் போல் கேவலமானதாகவே ஆகிவிடும் போலத் தோன்றுகிறது.

காந்தி வாக்கு

தமது கடமை

நம்முடைய உடலானது ஆரோக்கியம் இழந்து நோய்ப்பட்டால், அதைப் பற்றிக் கவனிக்க வேண்டிய கடமை நம்மைச் சார்ந்தது. ஆரோக்கியம் இழப்பது நம்முடைய குற்றம். நோயைக் கவனிக்காமலிருப்பது அதைவிடப் பெரிய குற்றம். செய்துவிட்ட குற்றத்தைத் திருத்திக் கொள்வது ஒருவனுடைய கடமையாகும். நேற்றுப் பிழை செய்தோம் என்று இன்று அந்தப் பிழையைத் திருத்துவதற்கு வேண்டிய முயற்சியை எடுக்க சோம்பக்கூடாது.

தேவை குறைய வேண்டும்

பண்பாடு அடைந்த மனிதன் 'இது வேண்டும், அது வேண்டும்' என்று தன் வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலாக்கிக் கொள்ளமாட்டான். தானுகவே யோசித்து வேண்டாததை நீக்கிக் கொண்டு வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்வான், தேவைகளின் எண்ணிக்கையை எவ்வளவு குறைக்க முடியுமோ, அவ்வளவு குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்தால் உண்மையான சந்தோஷம் அடைவோம்.

கடவுள் உண்டு

வாதங்கள் பல உண்மைகளைச் சாதிக்கும்; உண்மையல்ல வென்று பல விஷயங்களை நிரூபிக்கும். நாஸ்திகன் ஒருவன் வாதித்து என்னைத் தோல்வியுறச் செய்யலாம். ஆனால் என் புத்தியை முந்திக் கொண்டு பக்தி பறந்

தோடுகிறது. உலகமெல்லாம் இல்லை யென்றாலும், நான், "கடவுள் உண்டு, கடவுள் உண்டு. கடவுள் உண்டு, என்றும் உண்டு" என்று சொல்லுவேன்.

அவன் அறிவான்

நம்மை நாம் அறிவதில்லை. நம் உள்ளம் நமக்குப் பூரணமாகத் தெரிவதில்லை. அவன்தான் நம் உள்ளங்களை அறிவான். நம்மைப்பற்றி நாம் சொல்லுவதை அவன் ஒப்புக்கொள்ளமாட்டான். நம்மைப்பற்றியும், நம் எண்ணங்களைப்பற்றியும் பேசும்பொழுது நாம் உண்மை பேசுவதில்லை. உண்மையை மாற்றிச் சொல்லுகிறோம். அவனே உண்மையைக் கண்டுகொள்கிறான்.

பாவமும் பயனும்

செய்த பாவத்தின் பயன்களினின்று விடுபட வேண்டும் என நான் பிரார்த்தனை செய்யமாட்டேன்; பாவத்தினின்று விடுபட வேண்டும் என்றே வேண்டிக் கொள்வேன். பாவ எண்ணமே என் மனத்தில் எழ விடாமல் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் வேண்டிக் கொள்வேன். அவ்வாறு குற்ற மற்ற மன நிலையை அடையும் வரையில் சாந்தி இல்லை யென்பதை அறிவேன்.

மதமும் அரசாங்கமும்

மதங்கள் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கக் கூடாது. அரசாட்சியின் உதவியால் நிலைத்து நிற்கலாம் என்று எண்ணும் மதங்கள் அழிந்துபோகும். அத்தகைய மதங்களில் சக்தி யில்லை என்றே கொள்ள வேண்டும். அரசாட்சியின் ஆதரவைப் பெற்று நடைபெறும் மதங்கள் நாட்டுக்கு நன்மைதரமாட்டா. தத்தம் பலத்தையும் உறுதியையும் கொண்டே மதங்கள் நிலைபெற்று மக்களின் பக்தியை அடைய வேண்டும்.

பக்தி இல்லையேல்

பக்தியும் நம்பிக்கையும் இல்லையேல் இந்த உலகம் ஒரு விநாடியில் ஒன்றுமில்லாமல் போகும். ஜபமும் தவமும் செய்து ஆண்டவனை வழிப்பட்டுப் பரிசுத்த வாழ்வு நடத்திய பெரியோர்களுடைய அனுபவ சக்தியை நம்முடைய பொருளாக எடுத்துக் கொண்டு ஆள்வது தான் பக்தி என்று சொல்லப்படுகிறது. பல ஆண்டுகளுக்குமுன் அவதரித்த ரிஷிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய மகான்களை நம்புவதும் வழிபடுவதும் மூடபக்தி யல்ல, விவேகமே யாகும்.

நம் தனிச் சிறப்பு

நம்முடைய சுதந்திரத்தில் தனிச் சிறப்பு என்னவென்றால், அதன் வெற்றிச் சரித்திரத்தில் கலந்து வந்த கடவுள் பக்தியும் அதை யொட்டிய சாத்துவிக்மும்தான். அந்தத் தனிச் சிறப்பை மங்காமல் நாம் காப்பாற்றி வர வேண்டும். அப்போதுதான் பாரத நாட்டுக்கு உலகத்தில் ஒரு தனி இடம் இருக்கும்; இல்லாவிடில் மற்றவர்களோடு பின்வரிசையில் பத்தோடு பதினொன்றாக நிற்க வேண்டியதுதான்.

முயற்சியும் பயனும்

ஒரு பயனை அடைவதற்குப் பல வழிகள் உண்டு. "பயனே முக்கியம். சாதனங்கள் எதுவானால் என்ன ?" என்று சிலர் எண்ணுகிறார்கள். இது தவறு. என்னுடைய கொள்கையின்படி, ஒரு பயனை அடைவதற்காக நாம் கொள்ளும் முறைகளே மிக முக்கியம். முறைகள் பிழைபட்டால், பயனும் பிழைபட்டதே. பயன் வேறு, பயனை அடைய வழி வேறு என்பது பொய். முயற்சியே பயனும் ஆகும்.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையினுமோ ரெல்லை யில்லா வெளி வானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய் யருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலும் தொடரொணுப் பெருஞ் சோதி
அல்லா, அல்லா, அல்லா

—பாரதியார்

வீணும் பக்தி

ஒரு குடியானவன் நாள் முழுதும் கரும்புத் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தான். வேலை முடிந்த பிறகு பார்க்கையில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தோட்டத்துக்குள் செல்லவில்லை யென்றும், தண்ணீரெல்லாம் அங்கிருந்த எலி வளைகளின் வழியே போய்விட்டது என்றும் தெரிந்தது.

கீர்த்தி, விஷய சுகம், சௌக்கியம், ஆசை முதலிய வற்றில் கருத்தூன்றிய பக்தன் செய்யும் ஈசுவர ஆராதனையின் பலனும் இப்படித்தான் முடியும். அவன் தினந்தோறும் பிரார்த்தனை செய்தபோதிலும் கொஞ்சமும் அபிவிருத்தி அடையமாட்டான். ஏனெனில் அவனுடைய பக்தி முழுவதும் அந்த ஆசைகளாகிய வளைகளின் வழியே வீணுகப் போகின்றது. அப்படி

ஆயுள் முழுதும் பக்தி செய்த பின்னரும் கொஞ்சமும் அபிவிருத்தி அடையாமல் பழைய மனிதனாகவே இருப்பான்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

மூட மதியே!

மூட மதியே! எதுவரையில் பணம் சம்பாதிப்பதில் சக்தியுடையவனாக இருக்கின்றாயோ, அதுவரையில் உனது மனைவி, புத்திரன் முதலிய பரிவாரங்கள் பிரியமுள்ளவர்களாயிருப்பர். பின் தேகம் தளர்ச்சி யடைந்த போது வீட்டில் யாரும் உன் வார்த்தைகளைக் கேட்பது இல்லை.

—சர்ப்பட பஞ்சரிகா ஸ்தோத்திரம்

மன உறுதி

எந்த நிமிஷமும் உயிரைத் துறக்கச் சித்தமாயிருக்கும் மன உறுதி உடையவன்தான், உலகம் முழுவதும் எதிர்த்து வந்தாலும் வென்றுவிட முடியும்.

—ரோமா ரோலா

ஒரு கீதத்தின் பல்லவி

நியாயத்தைப் பேசத் துணிவு கொள்
தனியே நிற்கத் துணிவு கொள்
உறுதியான லட்சியம் உடையவனாய் இருக்கத் துணிவுகொள்
அந்த லட்சியத்தை அனைவருக்கும் தெரிவிக்கத் துணிவுகொள்.

பெண்களுக்கு

பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கடவுளையும் தங்கள் சொந்த பலத்தையும் நம்பியிருக்க வேண்டுமே யன்றி, பிறரை நம்பி யிருக்கலாகாது. மனோ தைரியமுடையவர்களாயும் உங்கள் பலத்தில் நம்பிக்கை உடையவர்களாகவும் இருக்கவேண்டும். போக்கிரிகள் உங்களைத் துன்பப் படுத்துவதற்குக்

காரணம் உங்கள் பயம்தான். இந்தியப் பெண்கள் அபலைகள் அல்லர். முன் காலத்தில் நம்முடைய பெண்கள் பல வீரச் செயல்கள் புரிந்திருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் அவர்கள் வாளின் உதவியைக் கொண்டு செய்யவில்லை. தங்கள் ஒழுக்கத்தின் மேன்மையைக் கொண்டே செய்திருக்கிறார்கள்.

—காந்தியடிகள்

பேசாமல் இருத்தல்

பேசாமல் இருப்பதே, நல்ல காரியம் செய்ததற்குச் சமானமான சந்தர்ப்பங்களை உண்டு பண்ணக் கூடியது.

—பகவத் கீதை

உரிமையும் கடமையும்

நாம் பெறத் தகுந்ததும் பாதுகாக்க வேண்டியதுமான உரிமைகளை யெல்லாம் கடமையைச் சரிவர நிறைவேற்றுவதன் மூலமே பெறமுடியும். நாம் உயிர் வாழ்வதற்குரிய உரிமை கூட ஜன சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றும் பொழுதுதான் கிடைக்கும். ஆதலால் இன்ன கடமையைச் செய்தால் இன்ன உரிமை கிடைக்கும் என்று எளிதில் சொல்லி விடலாம். கடமையைச் செய்யாமல் பெறவிரும்பும் உரிமையெல்லாம் உண்மையான உரிமையன்று, பிறர் உரிமையைப் பறிப்பதேயாகும்.

—காந்தியடிகள்

குருவும் சிஷ்யனும்

உள்ளத்தினுள்ளே அருள் உணர்வை யார் ஊட்ட வல்லவர் ஆகின்றாரோ அவரே குரு ஆகத் தகுதியுடையவர், எந்தச் சாதகன் ஒருவனுடைய உள்ளத்தில் அந்த அருள் உணர்வை அவர் கிளப்பி விடுகின்றாரோ, அந்தச் சாதகனுக்குச் சிஷ்யன் என்று பெயர்.

—சுவாமி விவேகாநந்தர்

பண்டிதரும் பாமரனும்

சில பண்டிதர்கள் கூடியிருந்து கொண்டு பகவத் கீதைக்கு விதவிதமான வியாக்கியானங்கள் செய்து சாஸ்திர ஆனந்தத்தில் திளைந்திருந்தார்கள். ஆங்கு கல்வி யறிவு இல்லாத ஒருவன் அமர்ந்து கொண்டிருந்தான். அவன் தன் போக்கில் நெக்குருகி ஆனந்த பரவசமடைந்தான்; அவனைப் பார்த்து பண்டிதர்கள் வியப்படைந்தார்கள்.

''கல்வி ஞானம் ஒன்றுமில்லாத நீ, பகவத் கீதையில் எந்தப் பகுதியை அறிந்து கொண்டவனாய் இன்புற்றிருக்கிறாய் ?'' என்று கேட்டார்கள்.

''கீதையைப் பற்றி நீங்கள் செய்கின்ற சம்வாதம் ஒன்றும் எனக்குப் புரியவில்லை. ஆனால் கண்ணனைப் பற்றிக் காதில் கேட்டதும் அவன் என் சித்தமிசை குடி கொண்டிருப்பதை உணர்ந்து ஆனந்த பரவச மடைகிறேன்'' என்றான், பாமரன் போன்று தென்பட்ட அந்த பக்தன்.

—சுவாமி விவேகாநந்தர்

துரோகம்

கண்ட இடங்களில் கவனமின்றித் துப்புகிறவர்களும், குப்பை கூளங்களை எறிகிறவர்களும் மனிதனுக்கும் கடவுளுக்கும் துரோகம் செய்கிறார்கள். மனிதனுடைய உடல் கடவுளின் ஆலயம். அந்த ஆலயத்துள் செல்லும் காற்றை அசுத்தமாக்குகிறவர்கள் ஆலயத்தை அசுத்தப்படுத்துகிறவர்கள் ஆகிறார்கள். அத்தகையோர் ராம நாமத்தை பஜிப்பதால் யாதொரு பயனும் அடைய மாட்டார்கள்.

—காந்தியடிகள்

வீரன்யார் ? கோழை யார்?

கார்டினல் ரிச்லூ என்ற பிரபல வீரர், மனிதர்களின் குணங்களை யறிய ஒரு புதிய முறையைக் கையாண்டார்.

அவருடைய வீட்டுக் கூடத்தில் ஒரு புறத்தில் அடிதடி போர் முதலிய பலாத்காரங்களைத் தீட்டிய சித்திரங்களைத் தொங்க விட்டார். மறு புறத்தில் அன்புள்ள குடும்பம், இயற்கைக் காட்சிகள் முதலிய அமைதி கமழும் சித்திரங்களைத் தொங்க விட்டார்.

உள்ளே தம்மைக் காணவரும் மனிதன், பலாத்காரப் படங்களின் அருகே சென்று வியந்து நின்ருனே, 'இவன் ஒரு கோழை' என்று ரிச்லூ தீர்மானிப்பார். அமைதியான படங்களைக் கண்டு வியந்து நின்ருல்தான், 'இவன் நல்ல வீரன்' என்று மதித்து, அவனுக்கு ராணுவத்திலே உயர்ந்த பதவிகளை யெல்லாம் அவர் அளிப்பார்.

நான் யார் ? நீ யார் ?

ஓர் இடத்தில் கூலிகள் பலர் சேர்ந்து பெரிய பெரிய தூண்களைத் தூக்கிக் கொண்டிருந்தனர். நெப்போலியன் அங்கே சிறிது நேரம் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ருர். கூலிகள் வியர்வை ஒழுகத் தூண்களைத் தூக்கிக் கொண்டிருந்தனர். கண்ட்ராக்டர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

அப்பொழுது நெப்போலியன் கண்ட்ராக்டரிடம் போய், "நீங்களும் ஒரு கை பிடிக்கக் கூடாதா?" என்ருர்.

அதற்குக் கண்ட்ராக்டர் பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டு, "நான் யார் தெரியுமா? கண்ட்ராக்டராக்கும்" என்ருன்,

உடனே நெப்போலியன் தாமே கூலிகளிடம் போய்த் தூண்களைத் தூக்க அவர்களுக்கு உதவிசெய்தார்.

கண்ட்ராக்டர் அவரைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான்.

" நான் தான் நெப்போலியன் " என்று அவர் பதிலளித்தார்.

கண்ட்ராக்டர் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

கலை

கலை என்பது உணர்ச்சிக் கடல். ஓவியனது உணர்ச்சியின் உயரமும், கலையின் ஆழமும் சந்தித்து ஐக்கியமடைகின்றன. உலகமே அவனது கலை அரங்கம்; உணர்ச்சிப் படம். இயற்கையின் சித்திரத்தினின்று பிறக்கும் விசித்திர விந்தையே கலை விளக்கம்.

ஓவியன் எந்தப் படத்துக்கும் உதாரணம் தேடுவதில்லை. அவனுடைய உள்ளம் ஒரு சிருஷ்டி கர்த்தா. சட்டத்தினாலே கலை வளராது; மனோ தர்மமே கலைக் கடல், உள்ள எழுச்சியின் வெளியீடான உயர்ந்த படங்களில் ஜோதியும் நிழலும் ஒன்றை யொன்று அணைந்து ஜீவிக்கின்றன. கலையே தளையற்ற சுதந்திரம், சமூகம் ஒரு விலங்குக் காடு, அருளற்ற யாக்கை.

—ஏகாகூரா காகூஜோ

சகோதரிகள் சண்டை

நானும் என் தங்கையும் சண்டை யிட்டோமானால், என் தாய் எங்கள் இருவரையும் பிடித்து எதிரெதிரே இரு நாற்காலிகளில் உட்கார்த்தி வைப்பாள்.

"ஒருவர் கண்ணை ஒருவர் பார்த்துக் கொண்டேயிருக்கவேண்டும். சிரிக்கவே கூடாது" என்று எங்களுக்குக் கட்டளை யிடுவாள்,

வெகு சீக்கிரத்தில் எங்களுக்குச் சிரிப்பு வந்து விடும் எங்கள் மனஸ்தாபமும் போய்விடும்.

—ஆங்கில ஆசிரியை

சிரிப்பு

சிரிப்பு என்பது அழுகைக்கு மாற்ருகும். நாம் சிரிக்கிற அநேக சந்தர்ப்பங்களில், அப்படிச் சிரிக்கா விட்டால் அழுதுவிடுவோம். கூட்டத்தோடு வாழ விரும்பும் சுபாவமுடையவன் மனிதன். அத்தகைய வாழ்வுக்கு அனுதாபம் மிக முக்கியமாகும். ஆனல், எதற் கெடுத்தாலும் அனுதாபம் செலுத்திக் கொண்டிருந்தால் மனிதன் பெரிய அழுமூஞ்சியாகி விடுவான்; அந்த சந்தர்ப்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியிருக்கும் அற் புதவரம் நகைப்புத்தான்.

—டாக்டர் வில்லியம் மக்டோகல்

என் சகோதரன்

வேல்ஸ் நாட்டின் எல்லைப் புறத்தில் ஒரு கிறிஸ்துவ போதகர் பின் வருமாறு சொன்னர்:—

நான் ஒருநாள் அதிகாலையில் மலைக்குச் சென்றேன். அப்பொழுது மூடுபனி பெய்து கொண்டிருந்தது. ஏதோ ஒன்று நடமாடுவதைக் கண்டேன். அது பார்ப்பதற்கு விநோதமாய் இருந்ததால் ஏதேனும் பூதமோ என்று எண்ணினேன். ஆனல் அதன் அருகே சென்றபோது மனிதன் என்று கண்டேன். இறுதியில் அதனிடம் போய்ச் சேர்ந்தபொழுது அவன் என் சகோதரனய் இருந்தான்.

வால்ட் டிஸ்னி

மனத்தைக் கவரும் ஆயிரக்கணக்கான பிராணிகள் சினிமாத்திரையில் தோன்றி உலகமெங்கிலும் குழந்தைகளை உற்சாகப்படுத்தியுள்ளன; பெரியவர்களையும் மகிழ்வித்துள்ளன. மாலுமி உடையணிந்த வாத்துகள், பேசும் சுண்டெலிகள், பியானோ வாசிக்கும் பன்றிகள், சறுக்கி ஓடும் நாய்கள் இவை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரசிக்கவும் பெறுகின்றன என்றால் அதற்கு வால்ட் டிஸ்னியும் அவருடைய மேதையுமே காரணம்.

நடைபெறக்கூடாத சம்பவங்களைக் கொண்டு வேடிக்கைக் கென்றே புனையப்பட்ட இப்படங்களோடு, சென்ற சில ஆண்டுகளில் வேடிக்கை அம்சமற்ற அழகிய உருக்கமான அத்தியாயம் ஒன்றும் சேர்ந்துவிட்டது. இயற்கையை உள்ளது போலவே காட்ட தாவரங்கள், பிராணிகள் இவைகளின் வாழ்க்கையை அப்படியே சித்தரித்துத் தீட்டும் திரைப்பட வரிசைதான் நாம் குறிப்பிடும் இப்புது அத்தியாயம்.

மிகச் சிறந்த இப் பொழுது போக்கின் சிருஷ்டிதாவான 57வயது நிறைந்த வால்ட் எலியஸ் டிஸ்னியின் வாழ்க்கையும் அவர் சிருஷ்டித்த கற்பனை லோகக் கதாபாத்திரங்களின் வாழ்க்கைக்கு ஒன்றும் சளைத்ததல்ல. ஒரு மனிதன் வாழ்க்கையில் மேம்பாடடைய ஒரு சுண்டெலி காரணமாயிருந்த தென்றால் நம்பத் தோன்றாது. ஆனால் வால்ட் டிஸ்னியின் வாழ்க்கையில் அது

நூற்றுக்கு நூறு உண்மை. முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் பொருளாதாரத்தில் அடி தட்டிய அவர் மன விரக்தியோடு சொந்த ஊர் திரும்பிக் கொண்டிருந் தார். சித்திரங்களை உயிருள்ளது போல் காட்டி அதன் மூலம் பணம் சம்பாதிப்பாதிப்பதென்பது வெறும் நீர்க் குமிழியாகத் தோன்றிய அந்நேரத்தில் மார்ட்டிமெரின் நினைவு அவர் மனத்திலெழுந்தது. ஹாலிவுட்டில் கார் ஷெட் ஒன்றில் அமைந்திருந்த அவருடைய ஸ்டூடியோ வில் ஓடி விளையாடிய ஒரு சிறு சுண்டெலிதான் இந்த மார்ட்டிமெர். ஸ்டூடியோவில் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து செல்லும் இவ் வெலியை அவர் பல தடவை கவனித்ததுண்டு. அது செய்யும் வேடிக்கைகளைக் காணச் சில சமயங்களில் அவர் அதை எதிர்நோக்கியும் நிற்பார். அலுப்புத்தட்டிய அவருடைய வாழ்க்கையில் இது ஒன்றுதான் பொழுதுபோக்காக அமையும்.

பூனை, நாய், மாடு, பன்றி, யானை இவையெல்லாம் இதற்கு முன்பு கார்ட்டூன் படங்களில் தோன்றியிருக் கின்றன. ஏன் மார்ட்டிமெரும் தோன்றக்கூடாது என்று டிஸ்னி எண்ணினார். சொந்த ஊரை அடைவதற்குள் சரித்திரப் பிரசித்தி பெறவேண்டியிருந்த இப் பிராணி யின் உருவம் ஓர் அழகான சித்திரமாக அவருடைய ஜேபியில் புகுந்து விட்டது. 'மிக்கி மவுஸ்' என்பதுதான் அதற்கு அவர் இட்ட பெயர்.

மௌனப் படங்களுக்கு முடிவு காலம் வந்து விட்ட தென முழங்கிக் கொண்டு, பேசும் படங்கள் வெளிவரத் தோன்றிய காலமது. 'ஸ்டீம் போட் வில்லி' என்ற பெயரில் மிக்கி மவுஸ் படத்தைத் தயாரித்து டிஸ்னி நியூ யார்க்கில் முதன் முதலாக ஓட்டினார். விமர்சகர்கள் அப்படத்தைப் பெரிதும் பாராட்டினர். ஜனங்கள் திரள்

திரளாக வந்துகண்டு அப்பாராட்டு அவ்வளவும் தகும் என அறிந்தனர். சுண்டெலி மனிதன் மீது வெற்றி கொள்ளும் நிலை வந்துவிட்டது.

உடனடியாகக் கிடைத்த வெற்றியின் காரணமாக மிக்கி எல்லோராலும் நேசிக்கப்படக் கூடிய ஒரு புது உயிர்ச்சித்திரமாக விளங்க ஆரம்பித்தது. வீடுதோறும் பெயர் விளங்க வேண்டியிருந்த பிராணியல்லவா அது? அது மட்டுமல்ல. 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா' வில் 'ஹு இஸ் ஹு' என்ற பிரமுகர்கள் வரிசையிலும் இடம் பெறக் காத்திருந்தது இந்தப் பிராணி.

வெகு விரைவிலேயே மிக்கி பல்வேறு பாஷைகளில் பல்வேறு பெயர்களுடன் உலகெங்கிலும் உலாவத் தொடங்கிவிட்டது. அமெரிக்க ரசிகர்கள் மட்டுமல்ல. வெளிநாட்டு ரசிகர்களும் மிக்கியைப் பெரிதும் நேசித்தனர். மிக்கி மீது அவர்கள் கொண்டிருந்த நேசத்தை அதை சிருஷ்டித்தவருக்கு அளித்த புகழ் மாலைகள் மூலம் வெளிப்படுத்தலாயினர். இக் கதாபாத்திரத்தை சிருஷ்டித்ததற்காக 1932-ல் சலனப்படக்கலை—விஞ்ஞான அகடாமி டிஸ்னிக்கு ஒரு விசேஷ பரிசு அளித்தது. உலகெங்கிலும் நல்லுணர்ச்சியைப் பரப்ப ஒரு புதுக் கலைப் பாணியை சிருஷ்டித்ததற்காக 1935-ல்'லீஜன் ஆவ் ஆனர்'என்ற விருதை பிரான்ஸ் அவருக்கு வழங்கியது.

அடுத்த ஒன்பது ஆண்டுகளில் டிஸ்னி கடுமையாக உழைத்துப் பல மிக்கி மவுஸ் படங்களை எடுத்தார். பல புதுக் கதா பாத்திரங்களையும் புகுத்தினார். இதற்கென்று அவர் வேலைக்கமர்த்தியவர்கள் இருபதிலிருந்து ஐம்பதாகி, பிறகு நூற்றைம்பதாக அதிகரித்தனர். இன்று அவருடைய ஸ்டூடியோவில் 1000-க்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கிறார்கள்.

அது வரையிலும் சிறு சிறு படங்களேயே எடுத்து வந்த டிஸ்னிக்கு 1935-ல் ஒரு முழு நீளக் கார்ட்டூன் படத்தை ஏன் தயாரிக்கக்கூடாது என்று தோன்றியது. தமது முழுவசதிகளேயும் ஒருங்கே பயன் படுத்தி 'ஸ்னே ஒயிட்டும் ஏழு குள்ளர்களும்' என்ற கதையைப் படமாக்க ஆரம்பித்தார். ஒரு முழு நீளக் கார்ட்டூன் படத்தை எடுக்க யாரும் முயற்சி செய்தது இதுதான் முதல் தடவையாகும். படத்தை எடுக்க மூன்று ஆண்டுகள் ஆயின. மிகப்பரிச்சியமான இக்கற்பனேலோகக் கதையை எடுக்க 4,77,000 சித்திரங்களேப் படம் பிடிக்க வேண்டியிருந்தது. பத்து மொழிகளில் எடுக்கப்பட்ட இப் படம் உலக மெங்கிலும் பெரியவர்கள், சிறியவர்கள் எல்லோரையுமே பரவசத்துக்குள்ளாக்கியது. இப்படத்திற்காக டிஸ்னிக்கு அகாடமியின் பரிசும் கிடைத்தது. ஹார்வார்ட், யேல் பல்கலேக் கழகங்கள் அவருககுப் பட்டங்கள் வழங்கின. "புதிய அமெரிக்க பரோபகாரத் தன்மையின் கவிஞன்" என மக்கள் அவரைப் பாராட்டலாயினர்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு 1940-ல், டிஸ்னி தமது 'பன்டாசியா' என்ற படத்தில் ஒருபுதுமுறையைக் கையாண்டார். இப்படத்தில் தோன்றிய மிருகங்கள், பூச்சிகள், பறவைகள், மீன்கள் ஒவ்வொன்றின் அசைவுகளேயும் குறிக்க ஒவ்வொரு இசைச் சுருளேக் கையாண்டதுதான் இப்புது முறை. இதில் அமெரிக்காவின் மிகப் பிரசித்தி பெற்ற இசை வல்லுநரான லியோபால்ட் ஸ்டோக்கோவ்ஸ்கியின் ஆலோசனேயும் ஒத்துழைப்பும் டிஸ்னிக்குக் கிடைத்தது. இப்படத்திற்கான இசையை ஸ்டோக்கோவ்ஸ்கியின் தலேமையின் கீழ் பிலடெல்பியா வாத்திய கோஷ்டியினர் ஒலிப்பதிவு செய்தனர். 'பன்டாசியா' திரை உலகத்தில் ஒரு புதுத் தத்துவத்தைப் புகுத்தியதுமல்லாமல் டிஸ்னிக்குப் புதுப்பாராட்டுகளேயும் வாங்கித் தந்தது.

டிஸ்னியின் கார்ட்டூன் படத் தொழில் இன்று 'வால்ட் டிஸ்னி புரொடக்ஷன்ஸ், லிமிடெட்' என்ற பெயரில் இயங்குகிறது. ஹாலிவுட்டுக்கு அருகில் உள்ள 51 ஏக்கர் நிலவெளியில் டிஸ்னி ஸ்டூடியோ அமைந்துள்ளது. மரநிழல் கொண்ட தெருக்கள் நெடுகே கட்டப்பட்டுள்ள வெள்ளைக் கட்டடங்களில்தான் சுமார் ஆயிரம் பேர் வேலை செய்கின்றனர். டிராப்ட்ஸ்மேன், சித்திரக்கலைஞர், இசைக் குழுவினர், காமிராக்காரர்கள், தொழில் நுணுக்க நிபுணர்கள், நிர்வாகக் குழுவினர் ஆகியோர் கொண்ட இக் "குடும்பத்தினரின்" ஒத்துழைப்பின் மூலம்தான் டிஸ்னியின் கார்ட்டூன் படங்கள் வெளி வருகின்றன.

ஒரு சித்திர உருவத்திற்கு உயிர் கொடுப்பது என்பது சிக்கல் நிறைந்த வேலை. இது மிக மெதுவாகத் தான் நடைபெற முடியும். மிக எளிதான ஒரு துண்டுப் படத்துக்கு 15,000 தனித் தனிச் சித்திரங்கள் வேண்டும். "ஸ்னோ ஒயிட்" போன்ற ஒரு முழு நீளப் படம் என்றால் இந்த எண்ணிக்கை 4,77,000 என்ற பிரம்மாண்டமான அளவுக்கு ஓடிவிடுகிறது. "மிக்கி மவுஸ்" ஒரு தடவை நகர 16 சித்திரங்களும், அது 'ஹலோ' என்று சொல்ல 8 சித்திரங்களும் தேவைப்படுகின்றன என்பதை நினைத்துப் பார்த்தால், இது விளங்கும்.

இயற்கையைப் படம் பிடிப்பதென்பதுதான் டிஸ்னி அபிவிருத்தி செய்த புது முறைகளிலேயே அதிசுவாரஸ்யம் நிரம்பியதாகும். ஜீவாதாரமான சம்பவமொன்றை அதன் ஊடே நின்று காணவைக்க காமிராவால் முடியும் என்ற உணர்ச்சி இப் படங்களைக் காணும் பொழுது நம் உள்ளத்தில் எழுகின்றன. பார்க்கப் போனால் இப் படங்கள் வாழ்க்கை இயல்களின் நாடித்துடிப்புகளையே

நம்மை ஸ்பரிசிக்க வைத்து விடுகின்றன. 'லிவிங் டெசர்ட்,' 'தி வேனிஷிங் பிரைரி' போன்ற இயற்கைப் படங்கள் எங்கு காட்டப்பட்டாலும் உலக மக்களின் பாராட்டைப் பெற அவை தவறியதில்லை.

ஆனால் இவ்வளவு வெற்றிகளும் வால்ட் டிஸ்னியைச் செருக்குறச் செய்துவிடவில்லை. ஒரு சிறு கட்டிடக் கான்டிராக்டரின் புதல்வரான டிஸ்னி தமது அசாதாரண திறமையை மேலும் மேலும் அபிவிருத்தி செய்து கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அலுப்பு நிறைந்த இந்த உலகத்திற்குத் தமது புதுக் கலைக் கோப்பின் மூலம் சிரிப்பும் ஆன்ம உற்சாகமும் ஊட்டுவதே அவருடைய பணியாக விளங்குகிறது.

குரங்குத் தொல்லை

காந்தியடிகள்

ஜனங்கள் குரங்குகள் செய்யும் தொல்லையைக் கண்டு வேதனைப்படுகிறார்கள். அவை இறந்து படாதா என்று எண்ணுகிறார்கள். எவரேனும் அவற்றைக் கொன்றால் மனத்துக்குள் மகிழ்ச்சி யடைகிறார்கள். ஆனாலும் அதே சமயத்தில் இப்படிக் கொல்லலாமா, அநியாய மல்லவா என்று கேட்கிறார்கள்.

சாஸ்திரங்களில் நல்ல பயிற்சியுடைய நண்பர் ஒருவர், "குரங்குகள் பயிர்களை அழிக்கின்றன; குழந்தைகளையும் சாமான்களையும் தூக்கிக் கொண்டுபோய் விடுகின்றன; பழங்களைத் தின்று நாசம் செய்கின்றன; இப்படிப் பல கஷ்டங்களை உண்டாக்குகின்றன. தினந்தோறும் அவை பெருகிக் கொண்டும் வருகின்றன. இந்நிலையில் அஹிம்சாவாதி செய்யக்கூடியது யாது?" என்று கேட்கிறார்.

என்னுடைய அஹிம்சா தர்மக் கொள்கை எனக்கே சொந்தமானது; நானே வகுத்துக் கொண்டது. மிருகங்களைக் கொல்லாமை என்னும் கொள்கையை என்னால் பரிபூரணமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மனிதனை விழுங்கவோ, துன்புறுத்தவோ செய்யும் மிருகங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற இரக்க உணர்ச்சி என்னிடம் உண்டாகவில்லை. அத்தகைய மிருகங்களைப் பெருகும்படி

பார்த்துக் கொண்டிருப்பது தவறு என்று கருது கிறேன். ஆதலால் எறும்புகளுக்கும், குரங்குகளுக்கும், நாய்களுக்கும் உணவு அளிப்பது கூடாது என்பது என் கொள்கை. நான் அவற்றின் உயிரைக் காப்பாற்று வதற்காக மனிதனின் உயிரைப் பலிகொடுக்கமாட்டேன்.

இவ் விதமாக யோசனை செய்து, நான் செய்திருக்கும் முடிவு யாதெனில், மனிதருக்குத் தீங்கு செய்யும் குரங்கு களைக் கொல்லுவது மன்னிக்கத் தக்கதேயாகும். அந்த் விதமான கொலை கடமையாகவே ஆய்விடுகின்றது. இந்த மாதிரி ஏன் மனிதர் விஷயத்திலும் நடக்கக் கூடாது என்று கேட்கக்கூடும். அதற்குக் காரணம், எவ்வளவு தீயவர்களாயிருந்தாலும் அவர்களும் நம்மைப் போன்றவர்களாய் இருப்பதே யாகும். கடவுள் பகுத் தறிவை மிருகங்களுக்குக் கொடாமல் மனிதனுக்கே கொடுத்திருக்கிறார்.

கதிரியக்க விளைவு ஆராய்ச்சி

இயற்கையில் கதிரியக்கமுண்டு. உயிரினம் தோன்றிய காலம் முதல் அவை கதிரியக்கத்திற்கு ஆளாகிவருகின்றன. ஆனால், அறுபது ஆண்டுகளுக்கு முன்புதான் கதிரியக்கம் பற்றிய தகவலை மனிதன் அறிந்தான். அணுக்கதிர்களால் ஆரோக்கியத்திற்குக் கேடுண்டு என்ற செய்தியைச் சமீபகாலத்தில்தான் தெரிந்து கொண்டான்.

ஆகவே கதிரியக்க விளைவுகளைப்பற்றி, இப்போது உள்ள தகவல்களைக் கொண்டு விசேஷமாக ஊகிப்பதற்கில்லை என்று ஐக்கிய நாடுகள் விஞ்ஞானக் குழுவின் அறிக்கை கூறுவதில் வியப்பில்லை. ஆயினும் அந்த அறிக்கை பயனுள்ள தகவல்களைத் தருகிறது.

பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சிக் கௌன்சில் இரண்டாண்டுகளுக்கு முன்பு, கதிரியக்க விளைவுகளைப் பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டது. இதே போன்ற ஓர் அறிக்கையை அமெரிக்க விஞ்ஞானிகளும் வெளியிட்டார்கள். இப்போது ஐக்கிய நாடுகள் விஞ்ஞானக் குழுவின் அறிக்கை வெளிவந்திருக்கிறது. இந்தத் துறையில் மேலும் மேலும் பணியாற்ற இவை தூண்டுகோலாக அமைந்துள.

பிரிடடன், அணுவிசை நிலையம் கட்ட திட்டமிட்டது. ஜனநெருக்கடியுள்ள அந்தத் தீவுகளில் கதிரியக்கத்தால் கேடுகள் விளையக்கூடுமென்ற ஐயம் தோன்றியதால், விளைவுகளைப் பற்றி ஆராயும் அவசியமேற்பட்டது.

அதன் பிறகு, விஞ்ஞான ஆர்வத்தால் விரிவான ஆராய்ச்சியில் கவனம் திரும்பிற்று. அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் வாய்ப்புள்ள நாடுகள் படைக்கலன்களின் திறனறிய வெடிச் சோதனைகளை நடத்தத் துணிந்த போது புதிய பிரச்னை எழுந்தது. வெடிச் சோதனைகளால் ஆகாயத்தில் கலக்கும் கதிரியக்கமுள்ள சாம்பல், ஆரோக்கியத்தைக் கெடுக்கும் எனத் தெரிந்தது. அதனுடைய வீர்யத்தையும் விளைவுகளையும் அறிய ஆராய்ச்சி அவசியமாயிற்று.

எக்ஸ்ரே சாதனங்கள்

கதிரியக்கமுள்ள சாம்பலால் கேடுண்டு என்றால், எக்ஸ்ரே சாதனங்களாலும் கேடுண்டு என்று எண்ணத் தோன்றிற்று. வைத்தியத்துறையில் எக்ஸ்ரே சாதனங்களை உபயோகிப்பது அதிகமாகிவிட்டது. இவற்றிலிருந்து வெளிப்படும் அணுக்கதிர்கள் உடலில் பாய்ந்து செல்கின்றன. ஆகவே விரிவான ஆராய்ச்சி அவசியம் ஆயிற்று. புற்று நோய் போன்ற கொடிய ரோகங்களைத் தெரிந்து கொள்ளவும் அவற்றின் காரணங்களை அறியவும் அணுக் கதிர் பயன்படுகிறது.

ஐக்கிய நாடுகள் விஞ்ஞானக்குழு, விரிவான முறையில் தகவல்களைச் சேகரித்தது குறிப்பிடத்தக்கது. பிரேஸில், இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் முதலிய நாடுகளிலிருந்து சான்றுகளைத் தொகுத்தது. அதன் அறிக்கைக்கும், இரண்டாண்டுகளுக்கு முன்பு வெளியான பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சிக் கௌன்சில் அறிக்கைக்கும் ஏறக்குறைய ஒற்றுமை இருக்கிறது.

விளைவுகள்

கதிரியக்கத்தால்—அது காஸ்மிக் கிரணங்களால் ஏற்பட்டாலும் சரி, எக்ஸ்ரே கதிர்களால் ஏற்பட்டாலும்

சரி—உடலுக்கு ஊறுண்டு என்பது தெளிவு. இயற்கையில் கிடைக்கும் அணுக்கதிர் வீச்சுள்ள பொருள்களாலும் வெடிச் சாதனங்களால் விழும் சாம்பலாலும் உடலுக்குக் கேடு நேரிடும் என்பதும் தெளிவு. மேலும், பாரம்பர்யத்தைப் பாதித்து விசித்திரப் பிறவிகளை உண்டாக்கும் என்றும் தெரிகிறது. அணுவைப் பிளக்கும்போது வெளிவரும் ஆற்றல் மனித உடலுக்குத் தீமை விளைவிக்கக்கூடியது என்ற சிந்தாந்தத்துடன் ஆராய்ந்தால் புதிய ஐயம் எழுகிறது. வெடிச்சோதனை அல்லது வேறு வழிகளில் ஏற்படும் கதிரியக்கத்தைவிட காஸ்மிக் கிரணங்கள் மூலமேற்படும் கதிரியக்கம் சுமார் 3000 பங்கு அதிகம் என்று தெரிகிறது.

தொழில்வளமுள்ள நாடுகளில் விரிவான முறையில் எக்ஸ்ரே சாதனங்களைக் கையாளுகிறார்கள். இவற்றால் ஏற்படும் கதிரியக்கத்தை அளவிட்டிருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் விஞ்ஞானக் குழு சேகரித்த தகவல்களிலிருந்து, இது வெடிச்சோதனைச் சாம்பலைவிட 50 முதல் 500 பங்கு கொடியது என்று தெரிகிறது.

வெடிச் சோதனைச்சாம்பலால் வேறு வித அபாயம் இருப்பதாகத் தெரிகிறது. இது எலும்பைப் பற்றிக் கொண்டு 'லுகிமியா' என்ற நோயை—ஒருவகை புற்று நோய்—உண்டுபண்ணுகிறதாம். ஆனால் இது பற்றிய ஆதாரங்கள் தெளிவாக இல்லை. ஆராய்ந்து முடிவுகூற வேண்டிய விஷயம் இது.

இயற்கை வழியிலோ அல்லது வெடி சோதனையாலோ ஏற்படக்கூடிய கதிரியக்கத்தில் ஆரோக்கியம் கெடும் என்பதைக் கற்பித்துக்கொண்டு தீமையின் அளவை நிர்ணயிப்பதிலும் ஐக்கிய நாடுகள் விஞ்ஞானக்குழு கவனம் செலுத்தியிருக்கிறது. எதிர்காலத்தில் தொடர்ந்து பல

வெடிச் சோதனைகளை நடத்தினால் ஆகாயத்தில் கதிரியக்கம் அதிகரித்துவிடும். அதனால்‘ லுகிமியா ’ போன்ற நோய்க்கு ஆளாகி இறப்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்; இயற்கையிலுள்ள கதிரியக்க வேகத்துடன் ஒப்பிட்டால், வெடிச் சோதனையிலேற்படும் கதிரியக்கத்தின் வேகம் குறைவு என்று தெரிந்தால், ‘லுகிமியாவுக்கு’ ஆளாகி உயிரிழப்போர் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகத்தான் இருக்கும். எந்திரசாதனங்களைக் கையாளுவதால் வெளிப்படும் கதிரியக்கத்தால் புற்று நோய் போன்றவை பரவக்கூடும்.

ஆகவே செயற்கை முறையில் கதிரியக்கம் பரவுவதைத் தடுக்கவேண்டும் என்றும், நிதானத்துடனும் எச்சரிக்கையுடனும் செயலாற்றவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் விஞ்ஞானக் குழு அறிக்கை கூறுகிறது. கதிரியக்கம் பரவாது தடுக்க முயற்சி வேண்டுமென்பதை, ஐக்கிய நாடுகள் சபை பல ஆண்டுகளுக்கு முன்பே, உணர்ந்திருக்கிறது. தொழில்வளமுள்ள நாடுகளிலும், பலவகைப் பாதுகாப்புகளுடன் தான், அணுக்கதிர்களை உபயோகிக்கிறார்கள். உதாரணமாக, பிரிட்டிஷ் வைத்திய சாலைகளில் நோயாளிகளைப் பரிசோதனை செய்ய, புது உத்திகளைக் கையாளுகிறார்கள். பழைய நாட்களைப் போலல்லாமல், மிகவும் குறுகிய காலத்தில் எக்ஸ்ரே படங்களை எடுக்கிறார்கள்.

அணுக் கதிரியக்கத்தால் அபாய முண்டெனத் தெரிகிறது. செயற்கை முறையில்—பல்வேறு நவீனப் பொறிகளை உபயோகிப்பதால்—கதிரியக்கம் பரவுகிறது என்பதும் தெளிவு. ஆனால் இதைத் தடுப்பது எப்படி? இது விஞ்ஞானத்திற்கேற்ற கேள்வி அன்று. அணுக் கதிர்ச்சாதனங்களால் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு. தீமையைக் கருதி நன்மையை இழந்துவிடக்கூடாது.

தீமையைக் குறைத்து நன்மையைப் பெருக்கிக்கொள்ள முயல்வதே அறிவுடைய செயல். உதாரணமாக, நுரை ஈரலைத் தாக்கியுள்ள புற்றுநோயைத் தெரிந்து கொள்ள ஒரு டாக்டர் எக்ஸ்ரே சாதனங்களை உபயோகிக்கிறர். நோய்க்கூறை அறிய முயலும்போது, நோயாளிமீது அணுக்கதிர்கள் பாயும் என்பதற்காக, வைத்திய சோதனையைக் கைவிடத் துணியமுடியுமா? எந்த டாக்டரும்,எக்ஸ்ரே சோதனையைக் கைவிட ஒப்பமாட்டார்.

காந்தியடிகளும் கடமையும்

1947-ஆம் ஆண்டில் காந்தியடிகள் நவகாளியில் இருந்து டில்லிக்குத் திரும்பியபொழுது, பாட்ஞ ரயில் நிலையத்தில் பீகார் மாகாண மந்திரிகள் காந்தியடிகளைச் சந்தித்து உரையாடினர்.

ரயில் புறப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. மந்திரிகள் பேசிக்கொண்டிருந்ததால், எப்படி ரயில் புறப்பட அனுமதி கொடுப்பது என்று ரயில் நிலைய அதிபர் தயங்கினுர்.

ரயில் புறப்பட வேண்டிய நேரங் கடந்துவிட்டது. ரயில் நிலைய அதிபர் மிகவும் தயக்கத்துடன் காந்தியடிகளை அணுகி, "ரயில் புறப்பட அனுமதிக்கலாமா?" என்று கேட்டார். உடனே காந்தியடிகள், "பிரயாணிகளிடமிருந்துதான் நீங்கள் உத்தரவு பெறுகிறீர்களா? அப்படியானுல் அடுத்த பெட்டிகளிலுள்ள பிரயாணிகளிடம் அனுமதி கேட்டீர்களா?" என்றுர்.

"மந்திரிகள் தங்களிடம் உரையாடிக் கொண்டிருப்பதால் தயங்கினேன்" என்றுர் அதிபர்.

"மந்திரிகளாயிருந்தால் என்ன? யாராயிருந்தால் என்ன? உங்களுடைய கடமையை நீங்கள் பயமின்றிச் செய்யவேண்டும். யாருக்கும் அஞ்சக்கூடாது. கடமையைச் செய்ய வேண்டும். நீங்கள் கடமையைச் செய்வது குறித்து மந்திரிகளும் மேலதிகாரிகளும் கோபம் கொள்ளக்கூடாது; பெருமை கொள்ள வேண்டும்" என்றுர் காந்தியடிகள்,

"பாபுஜி, பலஆண்டுகளாக நான் ரயில் இலாகாவில் வேலை செய்கிறேன். ஓய்வுபெற வேண்டிய காலம் நெருங்குகிறது. எங்களுடைய மேலதிகாரிகளைக் கேளாமல் ரயிலை விட்டால், எங்களுக்கு நேரும் கஷ்டங்களை ஆண்டவனே அறிவார். என்னுடைய வாழ்நாளிலே, கடமையைப் பயமின்றிச் செய்யும்படி, வார்த்தைகளால் மட்டுமின்றிச் செயலாலும் அறிவுறுத்தியது தாங்கள் தான். தங்களைத் தேசத்தின் பிதா என்று மக்கள் கொண்டாடுவதில் ஆச்சரியமொன்றுமில்லை" என்றார் ரயில் நிலைய அதிபர்.

காந்தியடிகள்

அன்பருள் பொறைதாம் போன்ற அருங்குணக் காந்தி போற்றி!
புன்புலை அயலார் பொல்லா அடிமையை அறுத்தாய் போற்றி!
வன்கணர் புரியும் இன்னு இன்பென உரைப்பாய் போற்றி!
நன்றியில் கயவ ருலே நாளுலந் தொளித்தாய் போற்றி!

—பொன். இராமலிங்கம்

தூமகேது அல்லது வால் நட்சத்திரம்*

எஸ். ஸ்ரீநிவாஸன்

கண் படைத்த பயனுடையோர் இரவில் வான வெளியைக் கண்டு மகிழா திரார். அங்குதான் எத்துணை விண் மீன்கள்; பொன்னையும் இரத்தினங்களையும் பழிக்கும்,ஒளி கக்கும் விண் சுடர்கள். இவற்றின் நடு நடுவே ஒளியும், தண்மையும், எழிலும் பொருந்திய கோள்கள். (இவற்றின் விந்தைகளைப் பிரிதோரிடத்தில் கண்டோம்.) இவற்றின் நடுவே சில சமயங்களில் ஒரு ஒளி மிக்க விருந்தாளி தோன்றும். பிரகாசமான தலையும் ஒளிக் கதிர்களை ஒன்றாகக் கூட்டிய கற்றையான வாலுமுள்ள இக் கம்பீரமான தோற்றம் தூமகேது (Comet) எனப் பெயர் பெறும். இத் தூமகேதுக்கள் எல்லையற்ற வான வெளியில் அலைந்து கொண்டிருந்தாலும், அவை சிற்சில நேரங்களிலேயே நமக்குத் தோன்றக்கூடும். 1843, 1847, 1853, 1861, 1882, 1910 முதலிய ஆண்டுகளிலே தோன்றிய தூமகேதுக்கள் மிக்கப் புகழும், பெயரும் பெற்றவை.

இவ்வாறாகத் தூமகேதுக்கள் பலவேறு தடவைகள் தோன்றிய போதிலும், அவற்றைக் கண்ட மக்கள் சிந்தை கலங்கி, ஏதோ பேராபத்து வரப் போகிறது என்று நடுங்கினரே தவிர அவற்றின் தன்மைகளை

* முன் இதழில் வெளிவந்த "வான வீதியிலே" என்ற கட்டுரையைப் பார்க்க.

ஆராயவில்லை. அத்தன்மைகளை ஆராய்ந்த பெருமை ஹாலி (Hally) என்ற வான சாஸ்திரியைச் சாரும். அவர் தாம் முதல் முதலாக வெவ்வேறு தூமகேதுக்கள் வெவ் வேறு குறிப்பிட்ட காலங்களில் தோன்றக்கூடும் என்று விவரித்துக்கூறினர். அவர் ஆராய்ந்த தூமகேது அவரது பெயராலேயே 'ஹாலி தூமகேது' என்று அமைக்கப்பெறு கிறது. 1910 ல் தோன்றிய இத்தூமகேது 1066 ல் வெற்றி வீரன் வில்லியம் இங்கிலாந்தைப் படை யொடுத்த காலை தேன்றிய தொன்று ஹாலி கணக்கிட் டுள்ளார். கி. மு. 240 லிருந்து தூமகேதுக்கள் தோன்றிய தேதிகள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. தூமகேதுக்கள் தோன்றும் காலத்தை அலெக்சிஸ்க்ளாடிகளேரான்ட் (Alexes clande cliarnt) என்ற வான சாஸ்திரி கணக் கிட்டார் என்பது குறிப்பிடத் தக்கது "டைகோப் ராஹி" (Tyclio Brahe) என்ற வான சாஸ்திரி தூமகேதுக்களை அதிகம் ஆராய்ந்தார். ஹாலியும், நியூட்டனும் அவை களின் பாதைகளை ஆராய்ந்தனர். ஹாலி தூமகேது நீங்கலாக வேறு பிரசித்தமான தூமகேதுக்களும் உள. உதாரணமாக ஈனக் தூமகேது (Eneke's comet.)

ஹாலி காலத்திற்கு முன் தூமகேதுக்களைப் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் இருந்தன. பூமியிலிருந்து எழுந்த ஆவி வான வீதியில் உயர எழும்பொழுது காற்று மண்டலத்தினுல் எரிக்கப் பட்டுத் தோன்றுவதே தூம கேது என்ருர் 'அரிஸ்டாட்டில்' (Aristotle). சிலர் அவற்றை உயிர் வாழ்ப் பிராணிகளாகக் கருதினர். பலர் அவற்றைப் பேராபத்து விளைவதற்கு அறிகுறி என்றே கருதி வந்தனர். 1910 ல் ஹாலி தூமகேது தோன்றிய காலை ஏழாம் எட்வர்டு மன்னன் இறந்ததை இதற்குச் சான்ருகக் கூறுவோரும் உண்டு.

ஹாலிதான் இவற்றின் தன்மைகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்தார். சூரியன், பூமி போன்று இவையும் கோள்களே. நிரந்தரமான பாதை (Orbit) அவற்றிற்கு உண்டு. அவை செல்லும் பாதை முட்டை வடிவாக இருக்கிற தென்றும், அவை புவி ஈர்ப்புக்குட்பட்டு இயங்கு கின்றன வென்றும் கண்டார்.

இதுவரை சுமார் எழுநூறு தூமகேதுக்கள் பட்டிய லுக்கு வந்திருக்கின்றன. திரும்பத்திரும்பத் தோன்றும் தூமகேதுக்களின் பாதை முட்டைவடிவாக விருப்பதாயும், திரும்பவும் தோன்ருதவைகளின் பாதை 'V' என்ற ஆங்கில எழுத்துப் போன்றதாயிருப்பதாகவும் கண்டுள் ளனர். அநேக தூமகேதுக்களின் பாதை தெளிவாகத் தெரியவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம்; இத்தூமகேதுக் களின் பாதை கிரகங்களால் பாதிக்கப்படுகிறது.

தூமகேதுக்கள் எக்காலத்திலும் தெரிவதில்லை. தூமகேது செல்லும் பாதை சூரியனுக்கு அருகில் சூரிய னைச் சுற்றிச் செல்லும்போதுதான் அவை நமக்குத் தெரியும். ஒவ்வொரு கிரகத்தையும் சுற்றி இயங்கும் பல தூமதுகேக்கள் உள்ளன. குரு (Jupiter) வைச்சுற்றி 34, சனியைச் சுற்றி 2 யுரேனெஸைச் சுற்றி 2, நெப்ட் யூனைச் சுற்றி 6 ம் உள்ளன. பெயர் பொற்ற ஹாலி தூம கேது கடைசி வகையைச் சேர்ந்தது. தூமகேதுக்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒன்றையே நாம் நேரில் பார்க்கலாம். அவைகளைக் கண்டு, ஆராய்வதில் தொலை நோக்கிகள் (Telescopes) மிகவும் பயன்படுகின்றன.

காமெட் (Comet) என்ற சொல் கிரேக்க மொழியி லிருந்து வந்தது. அதற்கு நீண்ட உரோம முடையது எனப் பொருள். தூமகேதுவின் வால்பாகம் குதிரைவால் போன்று நீண்டு பிரகாசமாயிருப்பதால், இப் பெயர்

நன்கு பொருந்தும். தூமகேதுக்கள் நமது சூரிய குடும்பத்தைச் சேர்ந்தவையாயிருக்கலாமென்று ஊகிக்கிறார்கள். ஆயினும் அவை கிரகங்களினின்று வேறுபட்டவை எனக் கூறுகின்றனர். அவை வெளி மண்டலத்திலிருந்து வந்திருக்கும் என்று கூறப் போதிய சான்றுகளில்லை. 'காஸ்மிக்' துகள்களால் அவை ஆக்கப்பட்டிருக்கவேண்டும். சூரியனிடமிருந்து வெகு தொலைவில் சுற்றிக் கொண்டிருக்கும் அவை சூரியனால் இழுக்கப்பட்டு சூரியனுக்கு அருகே வரும்போது பிரகாசமாக ஒளிர்கின்றன. கிரகங்களின் கவர்ச்சியால் அவை பாதை மாறுகின்றன. ஒரு தூமகேதுவில் மூன்று பகுதிகளைக் காணலாம். அவைகளை முறையே, தலைப்பகுதி, உட்கருப்பகுதி (Nucleus,)வால் பகுதி எனலாம். தலைப்பகுதி இலேசான பிரகாசமுடைய வாயுக்களால் ஆனது. முதன் முதலில் புலனாவது தலைதான். அது பதினாயிரம் முதல் பத்து இலட்சம் மைல் . விட்ட நீளம் உடையது. சூரியனை நெருங்க,நெருங்கஅது சுருங்கிவிடுகிறது. உட்கருப்பகுதி, எல்லாத் தூமகேதுக்களிலும் இது இருக்கவேண்டுமென்பதோ, பிரகாசமாயிருக்க வேண்டுமென்பதோ இல்லை. சில சமயங்களில், 1882-ல் ஏற்பட்டது போல் பல பகுதிகளாகச் சிதறுவதும் உண்டு. மிகவும் கவர்ச்சிகரமானதும் நன்கு காரணங்கூறமுடியாததுமான பகுதி வால் பகுதி தான். சில சமயங்களில் பத்துக் கோடி மைல் நீளமும் ஒரு கோடி மைல் அகலமும் இருக்கும். 1882ம் வருடத்து தூமகேது பூமியிலிருந்து $4{\cdot}7 \times 10\text{-}7$ மைலுக்கு அப்பால் இருந்தது. வால்பகுதி எப்பொழுதும் சூரியனுக்கு எதிர்த் திசையை நோக்கி இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. சூரியனுடைய கதிர்வீச்சு அழுத்தத்தினாலும், மின் எதிர்ப்பினாலும் இவ்வாறு வால் நீண்டு விடுகிறது என்பது சித்தாந்தம். வாலின் எடை மொத்தத்தில் மிகவும்

குறைவு. அசாதாரணமாக மெல்லியது. ஒரு தூமகேது எந்தக் கிரகத்தையும் அதனுடைய பாதையை விட்டு இழுக்கக் கூடிய அளவுக்கு வலுவுடையதாக இல்லை. தூமகேதுவின் வால் ஒரு கூடான கூம்பு (Hollow cone) போன்றது. வாயு உறையால் மூடப் பட்ட சிறு சிறு துணிக்கைகள் கொண்டது. இத் துகள்கள் சூரியனுடைய எதிர்ப்புச் சக்தியால் சூரியனுக்கு எதிர்த் திசையில் உந்தப்படுகின்றன. இத் துகள்கள் ஒரே மாதிரியாக இல்லாமல் வெவ்வேறு விதமாக இருப்பதால் வெவ்வேறு வித வால்கள் தோன்றுகின்றன. சில நீண்ட வாலையுடையன; சில விரித்தாடும் தோகை போன்ற வாலையுடையன;பிறிது சிலவோ கடுமையாக வளைந்த வாலையுடையன. வாலின் தன்மை அங்குள்ள மூலப் பொருளின் தன்மையைப் பொறுத்தது. நீண்டவால் ஜல வாயுவினால்ஆனது. தோகை போன்ற வால் ஹைட்ரோகார்பன்களால் ஆனது. வளைந்த வாலிலோ அயம், சோடியம் போன்ற உலோக ஆவிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் நிறமாலை தரிசினி (Spectroscope) மூலம் ஆராய்ந்து கண்டறிகின்றனர். தூமகேதுக்களின் ஒளிக்குக் காரணம் சூரிய ஒளி பிரதிபலித்தலினாலோ அல்லது சுயம்பிரகாசத்தினாலோ இருக்கலாம்.

தூமகேதுக்கள் அமைப்பில் திடப் பொருள்களின் துகள்களால் ஆனது. இத்துகள்கள் ஒன்றிலிருந்து மற்றவை வெகு தூரத்தில் இருக்கும். ஒவ்வொன்றும் ஒளிரக்கூடிய வாயுப் போர்வையால் சூழ்ந்திருக்கும். தூமகேதுக்களிலுள்ள திடப் பொருட்துகள்கள் சிதறி அழிவதினால் விண் எரிசுடர்கள் (Meteors) உண்டாகின்றன. 1852 ல் 'பீலா' தூமகேது இவ்வாறுதான் மறைந்தது,

சில தூமகேதுக்கள் முறையாக, ஒழுங்கான கால வட்டங்களில் தோன்றுகின்றன. உதாரணமாக

ஹாலி தூமகேது 76 ஆண்டுக்கொரு முறை தோன்றுவதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. இங்ஙனம் இத்தூமகேது முறையே 1537, 1607, 1682, 1758-59, 1835, 1910-11ல் தோன்றியது. இக் கண்க்குப்படி இது திரும்பவும் 1987 ல் தோன்றக் கூடும்.

சமீப காலத்தில் தோன்றிய சில தூமகேதுக்கள் கீழ் வருமாறு:-

ஹாலி தூமகேது — மே, 4,	1910
மூர்ஹௌஸ் தூமகேது	1908
பான்ஸ் வின்னெக்—ஜூன்	23, 1927
தூமகேது c.	1941
மர்காஸ் 1957-d	1957

தூமகேதுக்கள் அவை தோன்றும் வருஷத்தைக் கொண்டோ, அவற்றைக் கண்டுபிடித்தவர் பெயரைக் கொண்டோ பெயரிடப்படுகின்றன.

இங்ஙனம் சூரிய மண்டலத்தில் சுற்றித் திரியும் தூமகேதுக்கள் பூமியோடு மோதிவிட்டால் என்ன நிகழும் என்ற கேள்வி மிக்க நியாயமானது. அவ்வாறு நிகழ்ந்தால் கடுமையாக ஒன்றும் நேரிடாது. தூமகேதுவின் வால் ஊடே பூமி செல்ல நேர்ந்தால் குறிப்பான நிகழ்ச்சி ஒன்றும் நேரிடாது. ஆனால் பத்துக் கோடி ஆண்டுகள்முன் ஒரு தூமகேது பூமியோடு மோதியதால் தான் அரிசோனா (Arizona) வில் பெரிய பள்ளம் ஏற்பட்டது. இத்துணை காலத்தில் பூமிக்கு ஒரு தூமகேதுவினால் விளைந்த இன்னல் அது ஒன்றே. ஆகையால் தூமகேதுக்களைக் கண்டு மனித குலம் பயந்து மடிவதை விட்டு கோப்ராஹி கெப்ளார், ஹாலி முதலியோர் போன்று அவற்றின் தன்மையை ஆராய்ந்து நம் வெளியுலக அறிவை விசால மாக்கிக் கொள்ளுதல் நலம்.

கிராமப் பொதுவுடமை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

முக்கியமாக நாம் இந்தியாவில் இருக்கிறோமாதலால், இந்தியாவின் சாத்யா சாத்தியங்களைக் கருதியே நாம் யோசனை செய்யவேண்டும். முதலாவது, இந்தியாவிலுள்ள நிலச்சுவான்களும் முதலாளிகளும் ஐரோப்பிய முதலாளிகள் நிலச்சுவான்களைப் போல் ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும் குரூர சித்தமும் பூண்டோர் அல்லர். இவர்களுடைய உடைமைகளைப் பிடுங்க வேண்டுமென்றால் அது நியாயமாகாது. அதை நம் தேசத்தில் உள்ள ஏழைகள் அதிகமாக விரும்பவும் மாட்டார்கள். எனவே, கொள்ளைகளும், கொலைகளும், சண்டைகளும், பலாத்காரங்களும் இல்லாமல் ஏழைகளுடைய பசியைத் தீர்ப்பதற்குரிய வழியைத்தான் நாம் தேடிக் கண்டுபிடித்து அனுஷ்டிக்க முயலவேண்டும். செல்வர்களுடைய உடைமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே, நான் மேற்கூறியபடி பொருந்தவும் செய்யாது; சாத்யமுமில்லை.

ஆனால்கோடிக் கணக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவு கிடைக்குமென்ற நிச்சயம் மில்லாமாலும், லக்ஷக் கணக்கான ஜனங்கள் ஒரு வேளைக் கஞ்சி கிடைக்காமலே சுத்தப் பட்டினியால் கோர மரணமெய்தும்படியாகவும் நேர்ந்திருக்கும் தற்கால நிலைமையை நாம் ஒரு கனம் கூடச் சகித்திருப்பது நியாயமில்லை என்பது சொல்லாமலே பொருந்தும்.

எனவே உலகத் துன்பங்கள் அனைத்திலும் கொடிதான இந்த ஏழ்மைத் துன்பத்தைச் சமாதான நெறியாலும் மாற்றக்கூடிய உபாயமொன்றை நாம் கண்டுபிடித்து நடத்துவோமானல், அதனின்றும் நமது நாடு பயனுறுவது மட்டுமேயன்றி, உலகத்தாரெல்லாரும் நம்முடைய வழியை அனுஷ்டித்து நன்மை அடைவார்கள். அப்படிப்பட்ட உபாயமொன்று கிடைக்குமா என்பதைப் பற்றி இங்கே ஆராய்ச்சி செய்வோம்.

ஜனங்களுக்குள்ளே கலகங்களும் யுத்தங்களும் கொலைச் செயல்களும் நேரிடாவண்ணம் சமாதான நெறியிலே உலகத்தின் ஏழ்மையைத் தொலைப்பதற்குத் தகுந்த உபாயமாக எனக்குத் தோன்றுவதை இங்குத் தெரிவிக்கின்றேன்.

உலகம் தேசங்களால் அமைக்கப்பட்டது. தேசம் மாகாணங்களின் தொகுதியாம். மாகாணங்கள் ஜில்லாக்களின் சேர்க்கையாகும். ஜில்லா ஒரு சில நகரங்களும் பெரும்பான்மை கிராமங்களும் கூடிய தொகுதியாகும். எனவே, ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டு அதில் வறுமையே இல்லாமல் செய்வதற்குரிய வழி கண்டுபிடிப்போமாயின், பிறகு அந்த உபாயமே பூமண்டலத்தின் வறுமையைத் தொலைப்பதற்குப் பொருந்தியதாய் விடுமென்பது சொல்லாமலே விளங்கும். திருஷ்டாந்தமாக, நான் இப்பொழுது வாசம் புரிந்துவரும் கடயம் கிராமத்தை எடுத்துக்கொள்வோம். இவ்வூரைச் சூழ்ந்திருக்கும் வயல்களெல்லாம் சுமார் 30 பெரிய மிராசுதாரர்களுக்கும், பல சில்லரை நிலச்சுவான்களுக்கும் உரியன.

இந்த நிலச்சுவான்கள் எல்லோரும் சேர்ந்த ஒரு சபை அமைக்கப்படவேண்டும். இந்தச் சபையார் கோயில் வாசலிலே கூட்டம் கூடியிருந்துகொண்டு ஊர் ஜனங்கள்

அத்தனை பேரையும் பறைசாற்றுவித்துத் தம் முன்னே வரவழைக்கவேண்டும். அப்பொது நிலச் சுவான்கள் எல்லோருடைய சம்மதப்படி அவர்களின் பிரதிநிதியாக ஒருவர் எழுந்து நின்று கிராமத்தாரிடம் பின்வருமாறு பிரமாணம் செய்து கொடுக்கவேண்டும்.

எப்படி என்றால்:-

"கஞ்சியாவது கிடைத்து வருகிறதென்றும் அது நியதமாக எப்போதும் கிடைத்துவருமென நிச்சயம் இல்லாதபடியால் நீங்கள் எண்ணில்லாத மனக் கவலைகளுக்கும், மனஸ்தாபங்களுக்கும், பொருமைகளுக்கும், வஞ்சனைகளுக்கும், ஏமாற்றங்களுக்கும், கலகங்களுக்கும் இரையாகி மடிகிறீர்கள். "அன்ன விசாரம், அதுவே விசாரம்" என்று பட்டினத்துப் பிள்ளை சொல்லியது போல், உங்களுக்கு இந்த ஆகார விசாரம் தீராத பெரும் விசாரமாக வந்து மூண்டிருக்கிறது. நியாயமான உழைப்பாலோ, அல்லது ப்ருதோம் என்ற பிரான்ஸ் தேசத்து சாஸ்திரி,"உடைமையாவது களவு" என்று சொல்லியபடி வஞ்சனைத் தொழில்களாலோ, இந்த ஊரிலுள்ள வயல்கள் தோட்டங்கள் எல்லாவற்றையும் எங்கள் சிலருக்கு மாத்திரம் உரிமையாகும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். பூஸ்திதி எங்களிடம் இருப்பது எங்களுடைய குற்றமாகமாட்டாது. எனினும், உங்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும், ஸ்நேகமும் இல்லாவிட்டால் எங்களுக்கு இந்த நிலங்கள் எவ்விதமான பயனும் தரமாட்டா. மேலும் நீங்கள் அத்தனை பேரும் ஆகார விஷயத்தில் ஒருவித நிச்சயமில்லாமையால் படும் கஷ்டங்களும் அதினின்றும் உங்களுக்குள் ஏற்படும் போராட்டங்களும் எங்களையும் சூழ்ந்து தீராத துன்பத்திற்கு உள்ளாக்குகின்றன. நாங்கள் பொருளுடைமை விஷத்தில் மாத்திரம் உங்களினின்றும் வேறுபட்டிருப்பினும்

மற்றெல்லா அம்சங்களிலும் உங்களைப் போன்ற மனிதர்களே. ஆதலாலும், உங்களுடனே எப்போதும் ஊடாடிப் பழகுவதும் விவஹரிப்பதும் எங்களுக்கு மிகவும் இன்றியமையாததாலும், நீங்கள் தீராத வறுமை நரகத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில் நாங்கள் மாத்திரம் சந்தோஷமாக இருத்தல் சாத்தியப்படவில்லை. எங்களுடைய காரியங்கள் எல்லாம் உங்களாலே ஆக வேண்டி இருக்கிறது. எங்களுக்கு உங்களைத் தவிர வேறு கதியில்லை. உங்களுடைய வறுமைத் தீ எங்களை நானாவிதங்களிலும் சாபம்போல் எரிக்கிறது. எங்களுக்குள் சிறிதேனும் ஒற்றுமை இல்லாமல் செய்து வருகிறது. எங்களுக்குள் மேன்மேலும் பொறாமையை வளர்க்கிறது.

"பூமி எல்லோருக்கும் பொதுவான தாய் போலாகும். அதில் நாங்கள் மாத்திரம் உரிமை கொண்டாடுதல் அநியாயம் என்று எங்களுக்கு அர்த்தமாகின்றது. அதினின்றும், பூர்வீகக்காலம் முதல் பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் சொத்தை, ருஷ்யா முதலிய தேசங்களில் நடப்பது போல், நீங்களும் பலாத்காரமாக எங்களைக் கொன்றும், சிறையிலிட்டும் எங்களிடமிருந்து பறித்துக் கொள்வது நியாயமில்லை. ஏனென்றால், உடைமை, பொது நாகரிகத்திற்கு ஹேதுவாகும். எந்தக் காரணம் பற்றியும் கொள்ளையிடுவது சரியில்லை. நிலமில்லாத நீங்கள் எங்களுடைய நிலத்தைக் கொள்ளையிட்டுப் பறித்துக் கொள்ளலாமெனில், துணி இல்லாதவர்கள் உங்களுடைய துணிகளைப் பறித்துக்கொள்ளலாமன்றோ? வீடில்லாதவர்கள், பிறர் வீடுகளைக் கைப்பற்றிக் கொள்ளலாம். ஒரு சிறிதேனும் உடைமை யில்லாதவர்கள் மலைக்குறவரிடையே காணப்படுவதில்லை. பூஸ்திதி மாத்திரம் தானா உடைமை? துணி, மணி, வீடு, பாத்திரம் ,பண்டம்

பாய், தலையணி எல்லாம் உடைமைகளே. மலைப் பழிஞர் நாட்டிற்குள் பிரவேசித்து உங்களுடைய வீடு, பாத்தி ரங்கள் எல்லாம் அபகரித்துக் கொள்ளுதல் நியாய மென்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

"எனவே, எங்களுடைய பூஸ்ஸ்திதிக்ளை நீங்கள் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ளுதல் நியாயமன்று. ஆனாலும், பூமித்தாய் எல்லோருக்கும் பொதுவாகத் தரும் விளைபொருள்களை நாங்கள் சிலபேர் மாத்திரம் பங்கிட் டெடுத்துக்கொண்டு, உங்களுக்கு எங்களுடைய தயவு இருந்தால்தான் ஆகாரம், எங்கள் தயவில்லாவிட்டால் பட்டினி என்ற நிலையில் உங்களை வைத்து அதினின்று உங்களை அடிமைகளாக்கி நடத்தி வரும் மகா பாவத்திற்கு இன்னும் ஆளாயிருக்க எங்களுக்குச் சம்மதமில்லை. "இன்னும் வருவது கொல்லோ நெருநலுங் கொன்றது போலு நிரப்பு" என்று திருவள்ளுவர் சொல்லியது போல, (அதாவது "நேற்று முழுவதும் நம்மைக் கொலை செய்வதுபோலவே வருத்திக் கொண்டிருந்த வறுமை இன்றைக்கு வந்துவிடுமோ" என்று) பரிதபித்து ஏங்கும் நிலைமையில் நீங்கள் உயிர் வாழ்க்கை நடத்தி வருகிறீர்கள். உங்களை இந்த உணவு நிச்சயமில்லாத நிலையில் வைத்திருக்கும் பாவத்தை இனிச் சுமந்து கொண்டிருப்பதில் எங்களுக்குச் சம்மதமில்லை. எனவே உங்களில் ஆண், பெண், குழந்தை எவருக்கும் என் றைக்கும் ஆகார விஷயமாக பயமில்லாத படி செய்துவிட வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதற்கு, பின்வரும் வழியை அனுசரிக்க வேண்மென்று நிச்சயத்திருக்கிறோம்.

"அதாவது எங்களில் சிலரும் உங்களில் சிலரும்கூடி "தொழில் நிர்வாக சங்கம்" என்றொரு சங்கம் அமைக்கப் படும். பயிர்த்தொழில், கிராம சுத்தி, கல்வி, கோயில்

(மதப் பயிற்சி,) உணவு, துணிகள், பாத்திரங்கள், இரும்பு, செம்பு, பொன் முதலியன் சம்பந்தமாகிய நானு வகைப் பட்ட கைத்தொழில்கள்-இவை இந்தக் கிராமத் திற்கு மொத்தம் இவ்வளவு நடைபெறவேண்டுமென்றும் அத்தொழில்களில் இன்னின்ன தொழிலிற்கு இன்னுர் தகுதியுடையவரென்றும் மேற்படி தொழில் நிர்வாக சங் கத்தார் தீர்மானம் செய்வார்கள். அந்தப்படி கிராமத்தி லுள்ள நாம் அத்தனை பேரும் தொழில்செய்யவேண்டும். அந்தத் தொழில்களுக்குத் தக்கபடியாக, ஆண் பெண் குழந்தை முதலியோர் இளைஞர் அத்தனை பேரிலும் ஒருவர் தவருமல் எல்லாருக்கும் வயிறு நிறைய நல்ல ஆகாரம் கொடுத்து விடுகிருேம். நாங்கள் பிள்ளை பிள்ளை தலைமுறையாக இந்த ஒப்பந்தம் தவற மட்டோம். இந்தப் படிக்கு இந்த ஆலயத்தில் தெய்வ சந்நிதியில் எங்கள் குழந்தைகளின் மேல் ஆணையிட்டுப் பிரதிக்ஞை செய்து கொடுக்கிருேம். இங்ஙனம் நமக்குள் ஒப்பந்தம் ஏற்பட்ட விஷயத்தை எங்களில் முக்கியஸ்தர் கையெழுத் திட்டு செப்புப்பட்டயம் எழுதி இந்தக் கோயிலில் அடித்து வைக்கிருேம்.''

இங்ஙனம் பிரதிக்ஞை செய்து, இதில் கண்ட கொள் கைகளின்படி கிராம வாழ்க்கை நடத்தப்படுமாயின், கிராமத்தில் வறுமையாவது, அதைக் காட்டிலும் கொடு மையாகிய வறுமை யச்சமாவது தோன்ற இடமில்லாமல் ஒற்றுமையும், பரஸ்பர நட்பும் ஏற்பட்டு, அற்பாயுள், நோய் முதலிய பிசாசுகளின் பயந்தொலைந்து, பரிபூரண க்ஷேமம் உண்டாகும். ஒரு கிராமத்தில் அந்த ஏற்பாடு நடந்து வெற்றிகாணுமிடத்து, பின்னர் அதனை உலகத்தாரெல்லாரும் கைக்கொண்டு நன்மை அடைவார்கள்.

விஞ்ஞான ருஷ்யா

டாக்டர் எஸ். பகவந்தம்

ருஷ்ய விஞ்ஞானக் கழகத்தின் அழைப்பின் பேரில் ருஷ்யாவில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காகச் சென்ற இந்திய விஞ்ஞானிகள் கோஷ்டியில் நான் ஒருவன். எனக்கு அங்கே சில அனுபவங்கள் கிடைத்தன; சில விவரங்களையும் என்னால் சேகரிக்க முடிந்தது.

பல்வேறு ஸ்தாபனங்களுக்குச் சென்று பலரோடு விவாதித்த போதெல்லாம் எனக்குள்ளாகவே நான் சில கேள்விகளைக் கேட்டுக் கொண்டேன். அவை வருமாறு:

1. சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் நூற்றுக் கணக்கிலேயே இருந்த இந்த விஞ்ஞான நிலையங்களின் எண்ணிக்கை இப்போது மூவாயிரத்துக்குமேல் எவ்வாறு பெருகிவிட்டன ?

2. அதேபோல் முன்பு சில ஆயிரக் கணக்கில் இருந்த விஞ்ஞான ஊழியர்களின் எண்ணிக்கை இப்போது பிரமிக்க வைக்கும் அளவில் இரண்டே கால் லட்சமாக எப்படி அதிகரித்தது?

3. இப்போது ருஷ்யாவிலுள்ள கல்வி நிலையங்கள் எப்படி ஆண்டுதோறும் பட்டப் பிற்கால விஞ்ஞான தேர்ச்சி பெற்ற எண்ணாயிரம் மாணவர்களுக்கு மேல் பயிற்றுவித்து அனுப்ப முடிகிறது ?

4. இறுதியாக ருஷ்ய தொழில் நுட்பமும் விஞ்ஞானமும் மிகக் குறுகிய காலமென்று கூறத்தக்க நாற்பது

வருஷங்களுக்குள் எத்தனையோ அணு சக்தி நிலையங்களை ஏற்படுத்தக்கூடியபடியும், தொழில் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ளும்படியும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமாக மேம்படுத்திக் கொள்ளும்படியும், எல்லாவற்றிற்கும் அதிகமாய் இன்றைய உலகத்தில் விஞ்ஞானத்துறையில் முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்ருக விளங்கும்படியும் அபிவிருத்தியடையமுடிந்தது?

ஆரம்பத்திலேயே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இந்தக் கேள்விகளுக்குச் சுலபமான அல்லது நேரடியான பதில்களைச் சொல்வதற்கில்லை; அவ்வாறு சொல்லக் கூடிய நிலை ஏற்படவும் முடியாதென்றே கருதுகிறேன். ஆனால், இக்கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடிக்கும் முயற்சியில் நாங்கள் ரசமான பல புதிய விஷயங்களைக் கண்ணுற்ருேம். ருஷ்யாவின் வெற்றிக்குக் காரணமாய் இருந்த நடைமுறைகள், ஸ்தாபனங்கள், நிலையங்கள் முதலியவற்றைப் பார்வையிடுவதேகூட மிகவும் உற்சாகம் ஊட்டக்கூடிய ஓர் அனுபவமாய் இருந்தது.

இன்றைய விஞ்ஞானம்

இன்று ருஷ்யாவில் விஞ்ஞான நிலை எபப்டியிருக்கிறது என்பதை விவரிக்க முயலுகையில் நான்கு ஸதாபனங்களின் விசேஷ தன்மைகளை விவரிக்க வேண்டியிருக்கும். அவை, (1) விஞ்ஞானக் கழகம் (அகாடமி ஆப் சையன்ஸஸ்); (2) சர்வகலாசாலைகள்; (3) வெளிநாட்டு இலக்கியங்களைப் பிரசுரிப்பதற்கான காரியாலயம்; (4) கருவிகள் தயாரிப்பு முயற்சியை ஊக்குவித்து மேற்பார்க்கும் ஸ்தாபனம்.

விஞ்ஞானக் கழகம் மிக சக்தி வாய்ந்த ஒரு ஸ்தாபனம். ருஷ்யாவில் ஒரே ஒரு விஞ்ஞானக் கழகம்தான் இருக்கிறது. இரண்டு அல்லது பல கழகங்கள் இல்லை;

விஞ்ஞானத்துறைக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிற வேறு எந்த ஸ்தாபனமும் இல்லே. இந்த ஒரே ஒரு கழகத்தின் தலேவருக்கு அரசாங்க மந்திரி அந்தஸ்து உண்டு. இந்தக் கழகம் வேறு எந்த ஒரு மந்திரியின் அதிகாரத்தின் கீழ் இல்லே; மந்திரி சபைக்கு, நேரடிப் பொறுப்புள்ளதாக இருக்கிறது. இந்தக் கழகத்தில் எட்டு இலாக்காக்கள் உள்ளன. அவை வருமாறு: 1. பௌதிகம்-கணிதம், 2. ரசாயனம், 3. பூகர்ப்பம்-பூகோளம், 4. உயிரியல், 5. தொழில்நுட்ப விஞ்ஞானம், 6. சரித்திரம், 7. பொருளாதாரம், தத்துவம், சட்டம், 8, இலக்கியமும், மொழியும்.

அந்நாட்டில் விஞ்ஞானம் சகல விஷயங்களுக்கும் வியாபிக்கிற ஒரு விரிவான முறையாகக் கருதப்படுகிறது. பொருளாதாரம், சரித்திரம், மொழி இலக்கியம் முதலியவைகூட அதில் அடங்குகின்றன. இந்த அம்சத்தைச் சற்று ஆழ்ந்து கவனிப்பது நல்லது. அந்நாடு முழுவதிலும் இருநூற்றுக்குக் குறைவாகவே கழக அங்கத்தினர்கள் இருக்கிறுர்கள். ஒருவர் ஒரு தடவை கழக அங்கத்தினராக ஆகிவிட்டால் அவருக்குக் கணிசமான சம்பளம் உண்டு; அத்துடன் அவர் சாதாரணமாக அக்கழகத்தின் ஆதரவிலுள்ள ஏதாவது ஒரு நிலேயத்தில் முக்கியமான பதவி வகிப்பார். ஆகையால் அதற்குரிய சம்பளமும் கிடைக்கும். அந்தக் கழகம் நேரடியாக நிர்வகிக்கிற எத்தனேயோ நிலேயங்களும், பரிசோதனேச் சாலேகளும், பொருட்காட்சிச்சாலேகளும், பார்வைக்கூடங்களும், நூலகங்களும் இருக்கின்றன. இந்தக் கழகங்கள் பட்டங்களே வழங்கும். அவை சர்வகலாசாலேகள் வழங்குகிற பட்டங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. சர்வகலாசாலேகளில் பூர்வாங்கப் பயிற்சி பெறுகிறவர்கள் இந்நிலேயத்தின் ஆதரவிலுள்ள பரிசோதனேச்

சாலைகளில் பட்டப் பிற்கால மாணவர்களாக வேலை செய்வார்கள். அக்கழகம் அதற்கெனத் தனியாக கல்வித் தரத்தை நிர்ணயிக்கும். அதற்கெனத் தனிப் பரீட்சை முறைகள் உண்டு. அது வழங்கும் பட்டங்கள் நமது பி.எச்.டி., டி.எஸ்சி. போன்றவை. அவை இந்தியாவில் அளிக்கப்படுகிற அந்தப் பட்டங்களைவிட உயர்ந்த தரமுள்ளவை.

விசேஷ துறைப் பயிற்சி

அங்கே பொதுவான பயிற்சி அளிக்கிற நிலையங்கள் அநேகமாய் இல்லை. ஒவ்வொரு நுட்பப் பிரிவிலும் விசேஷப் பயிற்சி அளிப்பதற்கான நிலையங்களே சகஜமாய் இருக்கின்றன. குறிப்பிட்ட ஒரு சில நுட்பப் பிரிவில் அளவுக்கு மீறி விசேஷ தேர்ச்சி ஏற்படும்படி செய்தால் குறுகிய போக்கும் கட்டுப்பாட்டுக்குட்பட்ட மனப்பான்மையும் உள்ள மக்கள் தோன்றிவிடுவார்கள். தேசம் அரும்பெரும் சாதனைகளைச் செய்ய முடியாது என்று மற்ற நாடுகளில் இருந்துவருகிற ஒரு கருத்துக்கு இது சவால்போல் இருக்கிறது.

சுருக்கமாகச் சொல்லுவதானால் விஞ்ஞானக் கழகம் நன்கு அமைந்த செல்வாக்கு மிக்க ஒரு ஸ்தாபனம். அது சோவியத் மக்களை அதி உச்ச தொழில்நுட்ப திறமைக்கு அழைத்துச் செல்வதில் முதன்மையான பங்கு வகித்துவருகிறது.

ருஷ்யாவில் சுமார் முப்பத்தைந்து சர்வகலாசாலைகள் இருக்கின்றன. இந்தியாவிலும் அநேகமாய் அவ்வளவுதான். மாஸ்கோ சர்வகலாசாலைதான் மிகப் பெரியது. இருநூறு வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட அந்தச் சர்வகலாசாலையில் இருபத்தையாயிரம் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களில் இரண்டாயிரம் பேர்

பட்டப் பிற்கால மாணவர்கள். அது முப்பத்திரண்டு அடுக்குள்ள பிரம்மாண்டமான ஒரு கட்டடத்தில் இருக்கிறது. அதன் நூல் நிலயத்தில் ஐம்பத்தைத்து லட்சம் நூல்கள் உள்ளன.

பௌதிகப் பிரிவு

பௌதிகப் பிரிவில் நாற்பது விதமான பகுதிகள் இருந்தன. மொத்தம் எண்பது பீடங்கள் (சேர்ஸ்) உள்ளன. அதாவது நாம் இங்கே இலாகாக்கள் என்று கூறுகிறபடி பகுதிகளாய் அல்லது துறைகளாய் அவை இருந்தன. இதில்கூட அவர்கள் நுட்பத்துறையில் ஆராய்ச்சி செய்யும் போக்கைக் காணலாம். மொத்தப் படிப்புக் காலம் சுமார் ஐந்தரை வருஷம். அணு பௌதிகம் ஒரு விசேஷத்துறை. அது ஆறு பிரிவுகளாக மேலும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது (1) காஸ்மிக் கதிர்கள், (2) அணு பௌதிகம், (3) நியட்ரான் பௌதீகம், (4) "ஆக்செலேட்டர்ஸ்", (5) அணு ஸ்பெக்ட்ராஸ்கோப் (6) கதிர் இயக்க-கதிர் வீச்சுக்கள், மொத்தம் பௌதிகத்தில் இரண்டாயிரம் மாணவர்கள் இருக்கிறார்கள். நானூறு ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களில் எழுபத்தைந்து பேர் பேராசிரியர்கள், நூற்றிருபத்தைந்து உதவி பேராசிரியர்கள். எனவே, ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் ஒன்றுக்கு ஐந்து. எழுத்து மூலமான பரீட்சைகள் இல்லை. பரீட்சைகள் எல்லாம் அனேகமாய் வாய்மொழியாக நடத்தப்படும். சர்வகலாசாலை மாணவர்கள் தங்கள் விசேஷத் துறைகளைக் கற்பதோடு ஓர் அந்நிய மொழியையும் கற்கவேண்டும். ஓரளவுக்கு அரசியல் கொள்கைகளையும் அல்லது சமூக விஞ்ஞானத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும். மார்க்கஸிசம், லெனினிசம் சம்பந்தமான அடிப்படைகளே அவற்றில் அடங்கி இருக்கும்.

கடிதப் போக்குவரத்து மூலம் பயிற்சி

விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கூட அங்கே கடிதப் போக்குவரத்து மூலம் பயில்கிற மாணவர்கள் இருப்பது ஒரு விசேஷ அம்சமாகும். சிறு வயதிலேயே தொழிற்சாலையில் சேர்ந்துவிடுகிருர்கள். பரிச்சோதனைச்சாலைகளில் நடைமுறை அனுபவம் பெறுவதற்குத் தொழிற்சாலை உதவிபுரியும். அவ்வாறு நடைமுறை அனுபவம் பெறவேண்டுமென்று சர்வகலாசாலைகள் வற்புறுத்தும். அது கிடைத்தபின் அவர்கள் சர்வகலர்சாலைப் பரீட்சைகளில் தனிப்பட்ட மாணவர்களாகவோ கடிதப் போக்குவரத்து மாணவர்களாகவோ சேரலாம். தொழில்நுட்பக் கல்வித் தரத்தைக் குறையச் செய்வதை நான் ஆதரிப்பவன் அல்லன். ஆனல், இது சம்பந்தமாய் பரிசீலனை செய்தபின் நம் நாட்டிலும் சிறு வயதிலேயே தொழில் வேலைக்குச் சென்று விட்டவர்களை இவ்வாறு உயர் தேர்ச்சி பெறச் செய்ய முடியும் என்று தோன்றினல் அதைப் பரிசீலிப்பது நல்லது. ருஷ்யாவிலுள்ள கடிதப் போக்குவரத்து மாணவ முறையை நமக்கேற்றபடி மாற்றியமைக்கலாம்.

பதிப்பு — மொழிபெயர்ப்பு வேலை

அந்நிய நாட்டு இலக்கியப் பிரசுர காரியாலயத்துக்குச் சென்றது ஒரு தனி அனுபவமாகும். ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியாளர் தன் ஒரே ஒரு மொழியை மாத்திரம் தெரிந்தவராய் இருந்தால்கூட தடை எதுவுமின்றி விஞ்ஞான வேலைகளைச் செய்துவரலாம், அவருக்கு— பெரும்பாலான விஞ்ஞானிகளுக்குத் தங்கள் மொழியைத் தவிர வேறு மொழியில் தேர்ச்சி வேண்டிய அவசியமில்லை என்பதை ருஷ்யர்கள் நிரூபித்து விட்டார்கள். அவர்கள் எவ்வாறு இதைச் செய்யமுடிந்தது,' இப்போது

அவர்கள் சர்வதேச விஞ்ஞான அபிவிருத்திகளை எவ்வாறு உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடிகிறது என்று அறிவதில் எங்களுக்கு அக்கறை ஏற்பட்டது. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் அந்நிய தேச இலக்கியப் பிரசுர காரியாலயம் முக்கியமான பணியாற்றிவருகிறது. அதில் பதினறு இலாக்காக்கள் இருக்கின்றன. அவை சுமார் நாற்பது மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கின்றன. அசல் நூல்களைப் பிரதி செய்வதிலும் மொழி பெயர்ப்பதிலும் அவை வெகு திறமையாக செயலாற்றி வருகின்றன. சகல விஞ்ஞான சஞ்சிகையிலும், வெளியாகிற முக்கியமான கட்டுரைகளைச் சீக்கிரமாகவும், சரியாகவும் ருஷ்ய மொழியில் மொழி பெயர்த்து விடுகிருர்கள். அம்மொழி பெயர்ப்புகள் பல்வேறு பரிசோதனைச்சாலைகளுக்கு வினியோகிக்கப்படுகின்றன. அதனுல் யாரும் ஆங்கிலம், பிரெஞ்சு அல்லது ஜெர்மன் தெரியாத ஒரு காரணத்தால் தமக்கு விஞ்ஞான அறிவு கிடைக்க முடியவில்லை என்று குறைபட அவசியமில்லை. அந்நிய மொழிகளிலுள்ள பெரு விலையுள்ள விஞ்ஞான நூல்கள் ருஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்படுகின்றன. ருஷ்ய மொழியில் பதிப்புக்கு உள்ள விலை அசல் விலையில் ஐந்தில் ஒரு பங்கு.

விஞ்ஞானக் கருவிகள் தயாரிப்பு

விஞ்ஞானத்துறையில் மற்ருெரு குறிப்பிடத்தக்க அம்சம், விஞ்ஞானக் கருவிகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள வெகு திறமையான ஸ்தாபனம் ஒன்று இருப்பதுதான். சுமார் பதினைந்து அல்லது இருபது வருஷங்களுக்கு முன் ருஷ்யாவுக்குச் சென்றவர்கள் அங்கே அமெரிக்க அல்லது பிரிட்டிஷ் தயாரிப்பு விஞ்ஞானக் கருவிகள் ஏராளமாக இருந்ததையும் பார்த்ததாகக் கூறினர்கள்,

ஆனால், இன்று ருஷ்யாவில் செய்யப்படாத ஒரு கருவியைக்கூட அங்கே காண்பது அரிது. இவ்வாறு கருவிகள் தயாரிப்பு விஷயத்தில் அவர்கள் காட்டியுள்ள அக்கறை காரணமாய் அவர்கள் பரிசோதனைச்சாலைகளிலும், வேலை அறைகளிலும் கருவிகள் ஏராளமாகக் குவிந்திருக்கின்றன. இது அவர்களின் போதனை முறையில் முக்கியமான அம்சமாகும். ஏராளமான பேர் நியாயமான அளவுக்கு வெற்றிகரமாக பயிற்சிபெறுவது சாத்தியமாகியிருக்கிறது. ஓர் அறையில் மூன்று பெரிய ஸ்பெக்ட்ராமீட்டர்கள் இருப்பதைக் கண்டேன். அப்படி இருந்தும் மாணவர்கள் தாங்கள் அவற்றைக் கையாண்டு பார்க்கச் சந்தர்ப்பம் கிடைப்பதற்காக வரிசையாகக் காத்து நின்றதைக் கண்டேன். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால் நாம் விஞ்ஞானத் துறையில் முன்னேற விரும்பினால் வெளிநாடுகளிலிருந்து விஞ்ஞானக் கருவிகளையும் சிப்பந்திகளையும் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டும், அது அவசியம் என்கிற காரணத்தால்தான், அக்கருவிகள் எல்லாம் இந்தியாவிலேயே தயாராக வேண்டும். அவற்றிற்கு உருவம் அமைத்து, உறுப்புக்களை இணைத்து, தயார் செய்தால் அதில் ஈடுபட்டவர்கள் மற்றவர்களுக்கு அவசியமான அநுபவ அறிவை அளிக்க முடியும்.

மத்திய ரீதியில் நிர்வாகப் பொறுப்பும், மேற்பார்வைப் பொறுப்பும் உள்ள ஒரு ஸ்தாபனத்தின் ஏற்பாட்டின்கீழ், தேசத்துக்குத் தேவையான சகல கருவிகளையும் எவ்வளவு துரிதமாகத் தயாரித்துத் தர முடியுமோ அவ்வாறு தருவதற்கு முழு மூச்சுடன் முயற்சி நடக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது ஒரு தனி அம்சமாகும்.

விஞ்ஞானிகள் நகரம்

சைபீரியாவில் ருஷ்ய அதிகாரிகள் ஒரு தனி நகரை —விஞ்ஞானிகள் நகரை—அமைத்து வருகிறார்கள். அங்கே பல்வேறு தரப்பைச் சேர்ந்த இருபதாயிரம் பேர் குடியேற்றப்படுவார்கள். அவர்களில் நாலாயிரம் பேர் கணிசமான அந்தஸ்துள்ள விஞ்ஞானிகளாய் இருப்பார்கள். இது ஒரு துணிகரமான முயற்சிதான். ருஷ்யாவில் விஞ்ஞானத்துறையில் இவ்வளவு வெற்றி கிடைத்திருப்பதற்குப் பின்வரும் அம்சங்களே காரணம் என்று நான் கருதுகிறேன்: வேண்டுமென்றே திட்டமிட்டு நுட்பத்துறைகளில் அதி விசேஷப் பயிற்சி பெறுவது; ஆட்சியிலுள்ள அரசாங்க விஞ்ஞானிகளும் வாழ்க்கை அமைப்பில் முக்கிய பங்கெடுத்து வேலை செய்யத்தக்கவர்கள் என்பதை உணர்வது; தேசம் முழுவதுமே தொழில்நுட்ப அபிவிருத்திச் சூழ்நிலையில் வளர்ச்சியடைவது; நவீன விஞ்ஞானத்தில் நம்பிக்கையை வைத்து வாழ்க்கையை நடத்துவது முற்றிலும் தன்னிறைவு உள்ள நிலை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டு எல்லோருக்கும் வேலைவாய்ப்பு உள்ள சமூகத்தை அமைப்பது; அந்நிய ஆட்களையும் சாதனங்களையும் இறக்குமதி செய்வதை அடியோடு நிறுத்துவது.

இத்தகைய முயற்சிகள் காரணமாய் அங்கே ஏற்பட்டுள்ள சாதனையானது வெறும் அபிப்பிராயம் பற்றிய விஷயம் அன்று: நிதர்சன உண்மையாகும். அதே நடைமுறை இதர சூழ்நிலைகளில் வெற்றிகரமாகப் பலன் செய்யுமா, நம் நாட்டில் அந்த ஸ்தாபன அமைப்பு எந்த அளவுக்கு ஏற்படலாம் என்றும், விஷயங்கள் விவர நுட்பமாகப் பரிசீலிக்கப்படவேண்டிய அம்சங்களாகும்.

காந்தியைப் போற்றுவோம்

பொ. சுந்தரமூர்த்தி நாயனர்

(1)

கூட்டிலே சிங்கந் தன்னை
அடைத்திடுங் கொடுமை யைப்போல்
நாட்டிலே ஒன்றை யொன்று
நலங்கெடுத் தடிமை யாக்கி
வாட்டலே நாக ரிக
வளமென நாட்டா ரெல்லாம்
போட்டிபோட் டுலகஞ் தன்னைப்
பொசுக்கிட முனையுங் காலே

(2)

இருங்கடல் சூழ்ந்த வையத்
திலங்குபா ரதநன் னுட்டின்
பெருந்தவ மகனுய் வந்தான்
பேரரு ளாளன் காந்தி.
அருந்தவ நெறிகள் எல்லாம்
அன்பிலே அடங்கு மென்று
பொருந்தவே காட்டிப் போந்தான்.
பொன்னடி போற்றி வாழ்வாம்.

(3)

ஈட்டியும் தடிதுப் பாக்கி
எடுத்தர சாளும் செய்கை

காட்டிலே காணு கின்ற
கரும்புலி ஆட்சிக் கொப்பாம்;
நாட்டிலே மக்கள் ஒன்ருய்
நன்னெறி வழுவா தன்புக்
கூட்டமாய் வாழ்வீ ரென்ற
குருமொழி சிரமேற் கொள்வாம்.

(4)

சக்கர வர்த்தி யோடு
தலைச்சுமை தாங்கும் கூலி
மக்களும் கடவுள் முன்னே
மதிப்பினில் ஒன்றே என்னும்
பக்குவ மடைந்த ஞானி
பாரினுக் களித்த போதம்
முக்கிய மன்பே அஃதை
முரசறை வித்து வாழ்வாம்.

(5)

சத்தியம் உயிராய்க் கொண்டு
சாந்தமே உடலாய்த் தாங்கிப்
புத்தனைப் போன்ற மோனப்
புன்னகை ஒன்றி னுலே
இத்தரை எங்கும் அன்பின்
இராச்சியம் ஓங்கச் செய்த
சுத்தசன் மார்க்கச் சோதிச்
சுடரினை மனத்துள் வைப்பாம்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Mardas-18

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி.

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,
ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்
விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,
மானேஜிங் டைரக்டர்.

KUMARI MALAR REGD. NO. M. 4819

1912-ல் மோட்டார் போக்குவரத்தில் பெரும் புரட்சி ஏற்படுத்த உதவியவ

இவர்தான் முதல் டி. வி. எஸ். பிரயாண

46 ஆண்டுகளுக்கு முன் பஸ் நடத்தத் துணிச்சல் வேண்டும்: அதில் ஏறவும் அவ்வளவு துணிச்சல் வேண்டும்! துணிந்து முதல்முதல் ஏறிய இவரது உறுதியான நம்பிக்கையே டி.வி.எஸ். ஸ்தாபனம் வளர அழுத்தமான அஸ்தி வாரமாயிற்று. 1912-ல் இருந்தது போலவே டி.வி.எஸ். அன்பர்க திடநம்பிக்கையே இன்றும் எ வளர்ச்சிக்கு ஆதாரம்.

இன்று பெருகி வரும் தென்னிந் மோட்டார் தொழிலில் எல்ல தேவைகளையும் பூர்த்தி செய்துவரும்

டி.வி.எஸ். ஸ்தாபனத்தின் பகுதிகள்;

TVS

மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்., மதரா பெங்களூர்; சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்., மது சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்., மதராஸ்; சுந்தர இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்., புதுக்கோட்டை, மதராஸ் தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட் மதராஸ்; சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிட்., மதராஸ், இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்டு அக்ஸெஸரீஸ் பிரைவேட் லிட்., மதராஸ்.

டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்டு சன்ஸ் பிரைவேட் லிட்., மதுரை

TVS 2266